விலை ரூபா: 8.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பத்து

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 புரட்டாதி 01 சனிக்கிழமை (17.09.2005) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 272

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து

# முதலில் இறுதித் தீர்வு பின்னர் ஆயுதக்களைவு

## விடுதலைப்புலிகள் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கான இறுதித்தீர்வு நடைமுறைப்படுத்தாதவரை விடுதலைப் புலிகள் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டுமென அரசு கோர முடியாது.

முதலில் இறுதித்தீர்வு பின்னர்தான் ஆயுதக்களைவு என விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர். கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு பேட்டியளித்த விடுதலைப்புலிகளின் ஊடக இணைப்பாளர் தயா மாஸ்டர் தெரிவித்தார். (10.ஆம் பக்கம் பார்க்க)

## உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு நாளை மறுதினம் நியூயோர்க்கில்

(கொழும்பு)

இலங்கைக்கு நிதி உதவி வழங்கும் நாடுகளின் இணைத்தலைமைத்துவ நாடுகளின் விசேட மாநாடு எதிர்வரும் 19ஆம் திகதி அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெறவுள்ளது. அமெரிக்கா ,ஜப்பான்,ஐரோப்பிய ஒன்றியம்போன்ற நாடுகளின் தலைவர்கள் இம்மாநாட்டில்கலந்துகொள்ளவுள்ளனர்.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமை தொடர்பாக இணைத்தலைமைத்துவ நாடுகளின் கூடிய கவனம் செலுத்தவுள்ளதுடன் அரசிற்கும் விடுதலைப்புலிகளிற்குமிடையிலான பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு அழுத்தங்களைப் பிரயோகிக்கவும் தீர்மானம் மேற்கொள்ளுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (ச-4)

## அவசரகாலச் சட்டம் மேலும் ஒருமாதம் நீடிப்பு

அவசரகாலச் சட்டம் மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. கொழும்பில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிபுகளை அறிவிக்கும் மாநாட்டில் அரசாங்கப் பேச்சாளர்நிமால்சிறிபால டி சில்வா இதை அறிவித்தார்.

அவசர காலச் சட்ட நீடிப்புத் தொடர்பான சட்ட மூலம் எதிர்வரும் 21ஆம் திகதி பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு ஒப்புதல் பெறப்படும். முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொல்லப்பட்ட ஓகஸ்ட் 12ஆம் திகதி முதல் 10 நாட்களுக்கு முதலில் அவசரகாலச்சட்டம் பிறப்பிக்கப்பட்டது.பின் தொடர்ந்து ஒரு மாத காலத்திற்கு செயற்படுத்த பாராளுமன்றம் அனுமதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-8,4)



## மாணவியை கடத்திய இருவர் யாழ்.பொலிஸாரினால் கைது

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவியை வானில் கடத்திய இரு இளைஞர்கள் யாழ்.பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டனர். பிரஸ்தாப மாணவி பாடசாலை முடிந்து வீட்டிற்குச் சென்று கொண்டிருந்த போது ஹயஸ் வானில்வந்த இளைஞர்குழுவென்று அவரை பலவந்தமாக வானில் ஏற்றிக் கடத்திச் சென்றது.

கடத்தப்பட் மாணவியை கொழும்புத் துறைப் பகுதிக்கு அவர்கள் கொண்டு சென்ற போது அங்கு இருவர் பொலிஸாரிடம் வசமாக மாட்டிக்கொண்டனர்.

ஏனைய சிலர் வானுடன் தலைமறைவாகியுள்ளனர்.' இதேவேளை கைதான இரு இளைஞர்களும் மதுபோதையில் இருந்தார்களா என்பதனை கண்டறிவதற்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனும திக்கப்பட்டுள்ளனர்.தப்பிச் சென்றதாககருதப்படும் சில இளைஞர்களையும் வானையும் பொலிஸார் தேடிவருகின்றனர். (ச-19)

## பொலிஸாரை பார்வையிட உறவினர்களுக்கு அனுமதி

விடுதலைப்புலிகளினால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பொலிஸாரை சந்திக்க அவர்களின் உறவினர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசத்திற்குள் நுழைந்தபோது கைதுசெய்யப்பட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை உறுப்பினர் மூவரையும் அவர்களின் உறவினர்கள் சந்திப்பதற்கு வாய்ப்பளிக்குமாறு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் ஊடாக வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இதை விடுதலைப்புலிகள் ஏற்றிருப்பதாக சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவி வைத்திய திராணி விஜமான்ன தெரிவித்தார் இதேவேளை அவர்கள் மூவரையும் விடுவிக்குமாறு பொலிஸ் பிரிசோதகர் சங்கத்தினர் கண்காணிப்புக் குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இம் மூவரையும் விடுவித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் மகிந்தராஜபக்ஷவிடமும் இச்சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ச-4)

## நிரந்தர சமாதானம் ஏற்படுவதற்கு அரசாங்கம் தொடர்ந்து பாடுபடும்



### ஐ.நா. பொதுச்சபையில் ஜனாதிபதி

(நியூயோர்க்)

நடைமுறையில் உள்ள யுத்தநிறுத்த உடன்படிக்கையின் காரணமாக வடக்கு கிழக்கு பிரதேசங்களின் அபிவிருத்தி நடவடிக்களை துரிதப்படுத்த முடிந்ததாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு இவ் உடன்படிக்கை பேருதவியாக அமைந்தது. அத்துடன் யுத்தநிறுத்த உடன்படிக்கை காரணமாக விடுதலைப்புலிகள் வடக்கு கிழக்குப் பிரதேசங்களின் பயன்தரு செயற்பாடுகளில் ஈடுபட சந்தர்ப்பம் கிடைத்தது என தான் நம்புவதாக அவர் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 60 ஆவது கூட்டத்தொடரில் நேற்று முன்தினம் கலந்துகொண்டு உலகத்தலைவர்கள் மத்தியில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

மக்களின் பூரண ஆதரவோடு தமிழீழ விடுதலைப்புலிகளுடனான யுத்தத்தினை முடிவிற்கு கொண்டுவந்து சமாதான ஏற்பாடுகளை மேற்கொள்ள யுத்த நிறுத்த உடன்படிக்கை (10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 0777-2349999,
011-2372952-3, 011-2360290,011 - 2360291
e.mail:- jaffna@expoavi.com,reservations@expoavi.com.
இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உளளூர் விமான சேவை...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பட்டதாரி பயிலுநர்களுக்கு ஒரு மாதத்திற்குள் நியமனம்

வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கத்துக்கும் பட்டதாரிசங்க பிரதி நிதிகளுக்குமிடையில் நேற்றுமுன்தினம் திரு கோணமலையில் சந்திப்பு ஒன்று இடம் பெற்றுள்ளது.

இச் சந்திப்பின்போது பட்டதாரி ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படாமை குறித்து ஆராயப்பட்டது.

சந்திப்புக்குப் பின் ஒரு மாத காலத்துக்குள் பட்டதாரிகளுக்கு நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கப்படுமென்று உறுதியளிக்கப்பட்டது.

. இதையடுத்து, தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் எதிர்ப்புப் போராட்டத்தை கைவிடுவதற்கு பட்டதாரிகள் சங்கப் பிரதிநிதிகள் இணக்கம் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, மற்றும் திருகோணமலை மாவட்ட பட்டதாரி சங்கப் பிரதிநிதிகள் இச் சந்திப்பில் கலந்துகொண்டனர். ஒருமாத காலத்துக்குள் நிரந்தர நியமனம் வழங்கப்படாவிட்டால் மீண்டும் போராட்டத்தில் ஈடுபடப் போவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ற-8)

# துன்னாலை ஆட்டுப்பட்டிக் கிராமம் புனர் நிர்மாணிக்கப்பட்டு கையளிப்பு

துன்னாலை கிழக்கு ஆட்டுப் பட்டிக் கிராமத்தை நிக்கொட் சமூக அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினர் யாழ்.மாவட்டத்தில் முதலாவதாக புனரமைத்து உத்தியோகபூர்வமாக கடந்த புதன்கிழமை காலை பொதுமக்களிடம் கையளித்தனர்.

இந்நிகழ்வில் அரச அதிபர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

மேற்படி கிராமம் பின்தங்கிய கிராமமாக எந்தவித அபிவிருத்தியுமின்றி இருந்து வந்தது. தற்போது ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியினால் வீதிகள் புனரமைக்கப்பட்டு, மின் இணைப்பு, குடிநிர் வசதிகள், மழைநீர் வடிகால்கள் அமைத்தல் மற்றும் வீடுகள் என்பன அமைக்கப்பட்டு பல்வேறு வேலைத் திட்டங்கள் மூலம் அபிவிருத்தி செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இருப்பினும் இக்கிராமத்தில் உள்ள மக்களில் பாடசாலைக்கு செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளமை கவலைக்குரிய விடயமாகும். இதனையும் ஏதாவது நிறுவனங்கள் கவனத்தில் எடுத்து குறித்த வயதுடைய மாணவர்களை பாடசாலைக்கு அனுப்பி கட்டாயக் கல்வியை வழங்குவதன் மூலம் இக் குறைபாட்டை நிவிர்த்தி செய்தாலே பூரண அபிவிருத்தியென்ற இலக்கையடைய முடியும் என பலராலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ற-101)

# இராசி பலன்

**17.09.2005**

**(புரட்டாதி 01, சனிக்கிழமை)**

**சதுர்த்தசி முற்பகல் 10.46 மணிவரை**

**சதயம் பிற்பகல் 2.02 மணிவரை**

**இராகுகாலம 09.03-10.33 மணிவரை**

**சுபநேரம் 03.03-4.33 மணிவரை**

**பூரணை விரதம்- புரட்டாதிச் சனி**

- **மேடம்** — தொழில் சிந்தை, நண்பர்கள் சந்திப்பு, எடுத்தகாரியம் கைகூடும், போசன சுகம்.
- **இடபம்** — சுப நிகழ்வு, தூரதேசச் செய்தி, நல்ல பிரயாசை, முயற்சி கைகூடும்.
- **மிதுனம்** — ஆன்றோர் மதிப்பு, உடல் உழைப்பு, புதிய முயற்சி, வீண்பயம்.
- **கடகம்** — நண்பர்கள் வெறுப்பு, காரிய தடங்கல், உடல்நலக்குறைவு, வாகன பயம்.
- **சிங்கம்** — அபூர்வ சந்திப்பு, பண வருவாய், பிரயாண நன்மை, காரிய சித்தி.
- **கன்னி** — சுகவாழ்வு, சத்துருஜெயம், பணவருவாய், திடீர் பயணம்.
- **துலாம்** — வியாபார சிந்தை, குடும்பக்கவலை, காரிய இடையூறு, பூர்வ புண்ணிய கருமம்.
- **விருச்சிகம்** — பயந்த சுபாவம், ரோகநிலை, அற்பர் உறவு, முயற்சி தாமதம்.
- **தனுசு** — இனிய அனுபவம், வாக்குமேன்மை, புதிய பொருள்சேர்க்கை, முயற்சி கைகூடும்.
- **மகரம்** — செல்வாக்கு குறைவு, தொழில் மந்தநிலை, காரிய தடங்கல், உடல் நலக்குறைவு.
- **கும்பம்** — நல்ல முயற்சி, சயன சுகம், பிறருக்கு உதவுதல், உறவினர் சந்திப்பு,
- **மீனம்** — பிதா சிந்தை, காரிய தாமதம், சயன சுகக் குறைவு, பணவிரயம்.

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**

**- வளவன்**

# அரசியல் சாக்கடைக்குள் வீழ்ந்து கிடக்கிறது ஜே.வி.பி.

## வன்முறைகளற்ற ஜே.வி.பி: கடும் சாடல்

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் கைகோர்த்து செயற்படாவிடில் இந்த நாட்டுக்கு எதிர்காலமே இல்லை என்று வன்முறைகளற்ற ஜே.வி.பி.என்ற புதிய அமைப்பு கூறியுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் வெற்றிபெற்றாலும் சரி, மஹிந்த வெற்றிபெற்றாலும் சரி, பிரச்சினைகள் தீரப்போவதில்லை. பிரபாகரனுடன் கைகோர்த்து செயற்படாவிட்டால் இந்த நாட்டுக்கு எதிர்காலம் என்பதே கிடையாது.

இவ்வாறு வன்முறைகள் அற்ற ஜே.வி.பி.கட்சியின் உள்ளக மற்றும் சர்வதேச அமைப்பாளர் பேராசிரியர் கலாநிதி சுபா சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பியின். ஸ்தாபகரில் ஒருவரான ரோகண விஜயவீரவின் மைத்துனருமான பேராசிரியர் சுபா சந்திரா பெர்னாண்டோ ஜே.வி.பி. யிலிருந்து பிரிந்துசென்று ஜே.வி.பி வன்முறைகள் அற்ற கட்சியினை ஸ்தாபித்துள்ளார்.

இக்கட்சி கொழும்பில் நேற்று முன்தினம் செய்தியாளர் மாநாடு ஒன்றினை நடாத்தி தேர்தல் தொடர்பான தனது நிலைப்பாட்டினை அறிவித்தது.

தற்போதைய ஜே.வி.பியின் அரசியல் கடும் போக்கையும் ஜே.வி.பித் தலைவர்களையும் இப் புதியகட்சி கடுமையாக விமர்சித்தது. அங்கு உரையாற்றிய பேராசிரியா சுபா சந்திரா பெர்னாண்டோ,

ஆரம்பத்தில் ரோகண விஜயவீரவுடன் இணைந்து தாம் ஜே.வி.பி. கட்சியினை உருவாக்கியதாகவும் இன்று ஜே.வி.பி. அரசியல் சாக்கடைக்குள் வீழ்ந்து கிடக்கின்றது என்றும் தெரிவித்தார். (ற-4)

# பூரணைதின விழா

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீராம கிருஷ்ண சேவாச்சிரமத்தின் புரட்டாதி பூரணைதின விழா இன்று காலை 9.00 மணிக்கு யாழ்.கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் கோண்டாவில் இந்து மகாவித்தியாலய அதிபர் இ.அருணகிரிவாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் "சிலையும் நானே! சிற்பியும் நானே" எனும் சுவாமி விவேகானந்தரின் கருத்துக்களை உள்ளடக்கிய வீடியோ படக்காட்சியும் "எழுந்திரு! விழித்துக் கெள்!" எனும் சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கை வரலாறு தொடர்பான கண்காட்சியும் இடம் பெறவுள்ளது. (த-9)

# வல்லிபுர ஆழ்வார் மஹோற்சவம் 2 இல் விசேட பேருந்துச் சேவைக்கும் ஏற்பாடு

(துன்னாலை)

சரித்திரப் பிரசித்தி பெற்ற துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை வேட்டைத்திருவிழாவும், 15ஆம் திகதி சனிக்கிழமை இரவு 8 மணிக்கு சப்பறத் திருவிழாவும், 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், 17ஆம் திகதி திங்கட்கிழமை சமுத்திரத் தீர்த்தமும் மறுநாள் செவ்வாய்க்கிழமை கேணித்தீர்த்தமும் இரவு கொடிஇறக்கமும் இடம்பெறும். 19ஆம் திகதி புதன்கிழமை பிராயச்சித்தமும் ஆஞ்சநேயர் மடையும் இடம்பெற்று உற்சவம் இனிதே நிறைவுறும்.

. இதேவேளை, மேற்படி உற்சவ காலங்களில் இலங்கை போக்குவரத்து சபையினரால் விஷேட பேருந்துச் சேவைகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. பருத்தித்துறை மந்திகை ஊடாக வல்லிபுரக் கோவிலுக்கும், பருத்தித்துறை தும்பளை ஊடாக வல்லிபுரக் கோவிலுக்கும், யாழ்ப்பாணம் வல்லிபுரக் கோவில் ஊடாக பருத்தித்துறைக்கும் சேவைகள் மேற்கொள்ளவுள்ளதாக அறங்காவலர் சபையினர் அறிவித்துள்ளனர். (ற-101)

# பதிவு நடவடிக்கை

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றுக்குச் செல்லும் நீதிமன்ற ஊழியர்கள் தவிர்ந்த அனைவரும் பதிவு செய்யப்பட்ட பின்னரே உட்செல்ல அனுமதிக்கப் படுகின்றனர். பெயர், விலாசம், அடையாள அட்டை இல. என அனைத்தையும் பொலிஸார் பதிவுசெய்த பின்னரே இவர்களை உட்செல்ல அனுமதிக்கப்படுவதாக அறியப்படுகிறது.

அண்மையில் இணுவில் பகுதியில் கடத்திச் செல்லப்பட்டு கொலைசெய்யப்பட்ட பொலிஸ் அதிகாரியின் சம்பவத்தையடுத்து பொலிஸாரின் பாதுகாப்புக்கருதி எடுக்கப்பட்ட நடவடிக்கையாக இது இருக்கலாம் எனவும் கருதப்படுகிறது. (த-101)

# ஜனாதிபதியின் காய்நகர்த்தல்களால் நகரும் ஜே.வி.பியின் கனவுக்கோட்டை

(கொழும்பு)

ஆட்சியைப் பிடிக்க வேண்டுமென்ற ஜே.வி.பியின் கனவுக் கோட்டை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அரசியல் காய் நகர்த்தலால் தகர்ந்துபோய்க் கொண்டிருப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடு குறித்து ஜே.வி.பி.தெரிவித்துள்ள கருத்துக்கு பதிலளிக்கு முகமாக நேற்று முன்தினம் விடுத்த ஊடக அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸின் அரசியல் பலத்தினை சீர்குலைக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டபோது ஜே.வி.பிக்கு சம்பந்தம் இல்லை என்றே தாம் முன்பு கருதியதாகவும் எனினும் ஜே.வி.பிக்கும் அதில் தொடர்பு இருப்பதாக பின்னர் உறுதிப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-4)

# கலை இலக்கிய ஒன்று கூடல்

தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைவர் மூத்த கவிஞர் தமிழறிஞர் கலாநிதி இ.முருகையனின் 70ஆவது அகவை நிறைவு குறித்த கலை இலக்கிய ஒன்றுகூடல் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.30மணிக்கு திருநெல்வேலி இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

க.தணிகாசலம் தலைமையில் இடம்பெறவுள்ள இவ் ஒன்றுகூடல் நிகழ்வில் வரவேற்புரையை சட்டத்தரணி சோ.தேவராஜா நிகழ்த்துவார். பேராசிரியர் அ.சண்முகதாஸ் முரு கையனின் கட்டுரைகள் பற்றியும் பேராசிரியர் சி.சிவசேகரம் கவிதைகள் பற்றியும் தே.தேவானந் நாடகங்கள் பற்றியும் மதிப்புரைகள் வழங்குவார்கள்.

மேலும் வாழ்த்துரைகளை ஏ.ஜே.கனகரட்ணா, குழந்தை ம.சண்முகலிங்கம், பேராசிரியர் கே.சிவலிங்கராஜா, சி.கா.செந்திவேல், திருமதி பகீரதி கணேசதுரை, கலாநிதி செ.திருநாவுக்கரசு, திருமதி ஈஸ்வரி தர்மலிங்கம் ஆகியோர் வழங்குவர். தொடர்ந்து கவிஞர் சோ.பத்மநாதன் தலைமையில் கவிதைக்குள "உயிர் ஒன்றி வாழ்" என்னும் தலைப்பில் கவிஞர்கள் கல்வயல் வே.குமாரசுவாமி, ரி.திருக்குமரன், த.ஜெயசீலன் அழ பகீரதன் ஆகியோர் கவியுரைக்கவுள்ளனர். (ற)



யாழ்.மாவட்ட செயலகத்திற்கு சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் இருந்து இடமாற்றம் பெற்றுச்சென்ற பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் தி.குணாளசிங்கத்தின் சேவையை பாராட்டி மண்டுவில் கிராம அபிவிருத்திச்சங்கத்தினரால் வழங்கப்பட்ட சேவை நலன்பாராட்டுவிழாவின் போது சங்கத்தலைவர் செ.மனோகரன் உரையாற்றுவதையும் விழா நாயகனுடன் சாவகச்சேரி பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீனிவாசன் மற்றும் கணக்காளர் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில்காணலாம்.

படம்:- சாவகச்சேரி நிருபர்


# இரத்ததானம் பாதுகாப்பானது



* இரத்தானத்தின்முன், இரத்தம் வழங்குவதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சந்தர்ப்பங் கள், நோய்கள் இருக்கின்றதா என்பது கேட்டு அறியப்படும்.
* பின்னர் நாடித்துடிப்பு, குருதி அமுக்கம் போன்ற முக்கியமான சோதனைகள் செய்யப்படும்.
* குருதி கொடையாளர்களின் உடல் நிறையும். குருதிசெறிவும் அளக்கப்படும்.
* உணவு, நீராகாரம் உட்கொண்ட விபரம் கேட்டு அறியப்படும்.
* உடலில் உள்ள குருதியில் 10% குருதியே பெற்று கொள்ளப்படும்.
* குருதி வழங்கலின் பின்னர் சிறிது நேர ஓய்வும், நீர் ஆகாரமும் வழங்கப்படும்.
* குருதி வழங்கலுக்கு பின்னர் கடைப்பிடிக்க வேண்டியவை சம்பந்தமான அறிவுறுத்தல்கள் வழங்கப்படும்.

இரத்தவங்கி, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

# குரு மாற்றம்

# உங்களுக்கு எப்படி?

**19-09-2005 முதல் 20-10-2006 வரை**



## மீனம்

**பூரட்டாதி 4 ஆம்பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

அன்பார்ந்த மீன இராசி வாசகர்களே! சில நேரங்களில் சுயநலத்துடன் செயல்பட்டாலும் மற்றவர்களின் வளர்ச்சிக்கு உறு துணையாக இருக்கும் உங்களுக்கு இராசியாதிபதி குருபகவான் வரும் 19.09.2005 முதல் அஷ்டம ஸ்தானமான 8ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்ய உள்ளார். ஜென்ம இராசியில் இராகு. 7இல் கேதுவாக 21.09.2006 முடிய சர்ப்ப கிரகங்கள் சஞ்சரிப்பதும அஷ்டமகுருவும் உங்கள் வாழ்வில் அளவுக்கு அதிகமான பிரச்சினைகளை ஏற்படுத்தும். குடும்ப வாழ்வில் ஒற்றுமையில்லாத நிலை ஏற்பட்டு குடும்ப விஷயம்வழக்கு வரை செல்லக்கூடிய நிலை உரு வாகும்நீங்கள் எதிலும் எச்சரிக்கையாக வும் அதிக கவனத்துடனும் செயல்படுவது உத்தமம். தனகாரகரான குருவே அஷ்டமத் தில் சஞ்சரிப்பதால் பணவிஷயத்தில் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்பட்டு பல்வேறு சங்கடங்களைச் சந்திப்பீர்கள். சனிபகவான பஞ்சம ஸ்தானமான 5ஆம வீட்டில் 04.08.2007 முடிய சஞ்சாரம் செய் வது ஓரளவுக்கு சாதகமான அமைப்பாகும் உங்கள் உடல் ஆரோக்கிய ரீதியாக சோர் வான சூழ்நிலை,சுறுசுறுப்பு இல்லாத நிலை உண்டாகும்.

### ஆரோக்கியம்

உடல்நலப் பாதிப்புகள் ஏற்பட்டு மருத்துவச் செலவுகள் ஏற்படும். சிறுசிறு கட்டிகள்,காயங்கள் ஏற்படும். சிலருக்கு இரத்த அழுத்தம் போன்றவை அதிகமாகும். மனைவி வழியிலும் உஷ்ண சம்பந்தமான பாதிப்புக்களும், பிள்ளைகளால் மனச் சஞ்சலமும் உண்டாகும். அலைச்சலும் குழபபமும் உண்டாகும். சிறிய அளவு மருத்துவச் செலவுகள் உண்டாகும். வாகனம பயன்படுத்துபவர்கள் சற்று நிதானமாகச செயற்படவேண்டும்.

### செல்வம், செல்வாக்கு

செல்வம், செல்வாக்கு ரீதியாக சிக்கல்களில் சிக்கிக்கொள்ள நேரிடும். மிகவும் நெருக்கமானவர்களே தேவையற்ற விரோதததினை ஏற்படுத்துவார்கள். சிலருக்கு கைப்பொருளை இழக்கும் நிலையும் ஏற்படும். கடன்களால் அவமானப்பட நேரிடும். வம்பு,வழக்குகளில் சாதகமற்ற பலன் கிட்டும். பெரிய மனிதர்களை பகைத்துககொள்வீர்கள். அசையாச் சொத்து செலவினை ஏற்படுத்தும். கடன் தொல்லைகள் அதிகமாகும்.சிலருக்கு ஸ்திர சொத்துக்களை இழக்கும் நிலையும உருவாகும்.

### குடும்பச் சூழ்நிலை

குடும்பத்தில்குழப்பமான நிலை காணப்படும் எடுக்கும் காரியம் முடியாமல் இழு பறியாகும். கணவன்-மனைவியிடையே காரணமில்லாமல் சண்டை ஏற்படும். குடும் பததில் பணத்தட்டுப்பாடு அதிகமாகும். கடன்களும் தொல்லை தரும். திருமண சுபகாரியம் தடைஏற்படுத்தும். சிலர் நவீன பொருட்களை விற்றுவிடுவீர்கள். திருப்திகரமாக எதுவும் அமையாது. உடனிருப்பவர்களால் சில சமயம் தொல்லைகள் ஏற்பட்டாலும் நிதானித்து செயல்பட வேணடும். யாரிடமும் தேவையற்ற வார்த்தைகளைத் தவிர்க்கவும்.

### உத்தியோகஸ்தர்களுக்கு

உத்தியோகஸ்தர்கள் அடிக்கடி விடுப்பு எடுத்து மேலதிகாரிகளின் கெடுபிடிக்கு ஆளாக நேரும். எதிர்பாராத இடமாற்றமும் உண்டாகும். புதிய இடத்தில் யாரையும் அனுசரித்துப் போக முடியாது. குடும்பத்தைவிட்டு சிலர் பிரிந்து வாழ நேரிடும். உடல்நலமும் சோர்வாக அமையும் சிலருக்கு வெளிநாட்டுப்பணி அமைவதில் இடையூறுகள் ஏற்படக்கூடும். எடுக்கும் காரியம் எதுவுமே தாமதப்படும். அலைச சலும் குழப்பமும் கூடும்.

### தொழிலதிபர்களுக்கு

செய்கிற தொழிலில், வியாபார நிலை யில் நெருக்கடிகள்,சங்கடங்கள் தோன்றும். போட்டிகளும், பொறாமைகளும்ஏற்படும். புதிய தொழில், புதிய முதலீடு போன்றவற் றில் கவலை ஏற்படும். பணமுடக்கமும் பொருள் தேக்கமும் பயத்தை ஏற்படுததும். வேலையாட்கள் போனஸ், ஊதிய உயர்வு கேட்டு தொல்லை தருவார்கள். கமிஷன், ஏஜென்ஸி, காண்ட்ராக்ட் இலாபம் தராது.

### மங்கையருக்கு

நீங்கள் எதிலும் மிகவும் எச்சரிக்கையுடனும் நிதானத்துடனும் செயல்பட வேண்டும்.உடல்நலனில் அதிகமான அக்கறை செலுத்துங்கள். குடும்பத்தில் அடிக்கடி சண்டை,சச்சரவுகள் தோன்றும். ஓயாத வேலை,மன உளைச்சல் உண்டாகும். மன அமைதி குறையும்படியான சம்பவம் நடைபெறும்.

### கல்விநிலை

கல்வியில் என்னதான் முயற்சி செய்து படித்தாலும் குறைவான மதிப்பெண் தான் கிட்டும். படித்தது மறக்கும். திறமைகளை வெளிப்படுத்த சோம்பல் உண்டாகும். தேவையல்லாத சிநேகிதத்தை விட்டு விலகுவது மேண்மை தரும் கடின உழைப்புத தேவை.

### கலைஞர்களுக்கு

உங்களது செயல்களால் புதிய வாய்ப்புப் பெறத் தடைஏற்படும். மற்றவர்களை அனுசரித்துப் போகவேண்டும். எதிர் பார்த்த வெற்றி அமையாது.தொழில் ரீதி யாக போட்டிகள், மறைமுக எதிர்ப்புக்கள ஏற்படும். உடல்நலனிலும் கவனம செலுத்த நேரும். வெளியூர், வெளிநாட்டுப் பயணத்தால் களைப்பும் சோர்வும் அடைய நேரும்.புது முயற்சிகளை கூடுமானவரை தவிர்ப்பது நல்லது.

### விவசாயிகளுக்கு

உங்கள் பயிர்களில் புழு,பூச்சிகளின தொல்லைகள் அதிகமாகும். விவசாயப் பணிகள் தடைப்பட்ட வருமானம் குறை யும். கடன் தொல்லைகள் அதிகமாகும். கால் நடைகளும் அடிக்கடி நோய்வாய்ப் பட்டு செலவுகளை ஏற்படுத்தும். தானியங் களுக்கு நல்ல விலை கிடைக்காது.

### இளைஞர்களுக்கு

உங்களை யாரும் புரிந்துகொள்ளமாட்டார்கள்உங்களுக்கு திறமை இருந்தாலும் அதை வெளிப்படுத்த முடியாது. புதிய வேலை அமைய தடையுண்டாகும். பல முறை அலைய நேரிட்டாலும் வீணாக அலைக்கழிக்கப்படுவீர்கள். பலனிராது.

### குரு பகவான் துலாத்தில் சித்திரை நட்சத்திரத்தில் 19-09-2005 முதல் 20-10-2005 வரை

கடன்களை பிற்பாதியில் அடைக்க உறவினர் ஒருவர் உதவி செய்வார். இழந்த பொருட்களை மீண்டும் பெறும் நிலை உருவாகும். கொடுக்கல் வாங்கலில் ஜாமீன் தருவது மட்டும் கூடாது. பொருளாதார நிலை படிப்படியாக முன்னேற்றமடையும். கடன் வசூலாகும். குடும்பத்தில் கணவன்- மனைவியிடையே ஒற்றுமை இருக்கும். தொழில் வியாபாரத்தில் சற்று அனைவரையுமே அனுசரித்துப் போனால் அனுகூலப்பலனை அடைவீர்கள். சிலருக்கு கூட்டுத்தொழிலில மாற்றம் உண்டாகும். புதிய முயற்சிகளில் நிதானமாக செயல்பட வேண்டும். உத்தியோக ரீதியாக அதிகாரிகளின் கெடுபிடி விலகி ஆதரவைப் பெறமுயற்சி செய்வீர் கள். புதியவேலை தாமதமாக கிடைக்கும்.

### குரு பகவான் துலாத்தில் சுவாதி நட்சத்திரத்தில் 21-10-2005 முதல் 26-12-2005 வரை

கணவன்-மனைவியிடையே பூசல்கள் இருபபதால் சிலர் அசையாச் சொத்தையோ பழைய வண்டி வாகனத்தையோ விறக முன்வருவார்கள். கடன் தொல்லைகளால் மன அமைதிகுறையும். பற்றாக் குறையால் அவதி ஏற்படும். நெருக்கமானவர்களே கொடுக்கல் வாங்கலில் விரோதமாவார்கள். கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற முடியாது. பெரிய மனிதர்க ளிடம் வீண்பகை உண்டாகும். உடல்நலம் பாதிப்படையும்.சரியாக உறக்கமின்மை, வயிற்றுக் கோளாறுகளால் அதிக மருததுவச் செலவுகள் உண்டாகும். தேவையற்ற வெளியூர்ப் பயணம் சோர்வினை ஏற்படுத்தும். தொழில் வியாபார நிலையில நலிவைச் சந்திக்கவும் நேரிடும். அரசாங கம் மூலம் எதிர்பாராத திடீர் சோதனை களும் உண்டாகும்.

### குரு பகவான் துலாத்தில் விசாக நட்சத்திரத்தில் 27-12-2005 முதல் 02-03-2006 வரை

எல்லா வகையிலும் சோதனையான பலன்களே உண்டாகும். உங்கள் உடல் நலத்தில் அதிக அக்கறை செலுத்த வேண்டிய காலமாகும்.மனைவி வழியிலும் கர்ப்பக் கோளாறுகளும் மாதவிடாய்த் தொல்லைகளும் ஏற்பட்டு மன அமைதி குறையும். புத்திரர்க ளால் மனசசஞ்சலம் உண்டாகும். வீண்

அமைதி குறையும். புத்திரர்களால் மனசசஞ்சலம் உண்டாகும். வீண்
செலவுகளைக் கட்டுப்படுத்துங்கள். எந்தவொரு காரியமும் மிகவும் யோசித்த பின் முடிவெடுப்பது உத்தமம். தொழில், வியாபாரத்தில் போட்டிகள்,மறைமுக எதிரிகளின் தொல்லைகள் ஏற்படும். பெருந்தொகை முதலீடு, புதிய தொழில் தொடங்கும் திட்டங்களை தள்ளிப்போடு வது சாலச்சிறந்தது. கணவன்-மனைவி யிடையே ஒருவருக்கொருவர் அனுசரித் துப போகவேண்டும். குடும்பத்தில் திரு மண சுபமுயற்சி தடைப்படும். மாணவர்கள் கடுமையான முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

### குரு பகவான் வக்ர நிலையில் 03-03-2006 முதல் 04-06-2006 வரை

கடந்த காலத்தின் தடைகளும் தாமதங்களும் நிம்மதியில்லாத சூழ்நிலை களும் படிப்படியாக விலகி ஓரளவு அனுகூலப் பலனை அடைகின்ற கால மாகும். பெருமளவில் இருந்த சிக்கல் களும் செலவுகளும் கூட படிப்படியாக குறைந்துவிடும். மனத்தில் சிறிதளவு நிம்மதியும் உற்சாகமும் உண்டாகும். உடல்நலத்தில் ஏற்றம் ஏற்படும். மருத்துவச் செலவுகள் குறையும். பொருளா தார நிலையில் சிக்கனமாக செலவு செய்தால் அனுகூலப்பலன் ஏற்படும். தொழில் ,வியாபார நிலையில் மந்தமான நிலை விலகி ஓரளவு இலாபம் ஏற்படும். கூட்டுத்தொழில் கூட்டாளிகளிடையே நம்பிக்கை,நாணயம் உருவாகும். கொடுக் கல் வாங்கலில் நிதானமாக செயல்பட வேண்டும். மாணவர்களின் கல்வியிலும் முன்னேற்றம் தெரியும். அரசியல்வாதிகள பேசசில் கவனமுடன் செயல்பட வேண்டும்

### குரு பகவான் துலாத்தில் சுவாதி நட்சத்திரத்தில் 05-06-2006 முதல் 18-08-2006 வரை

குடும்பத்திலும்,உற்றார் உறவினர்களிடையேயும் வீண்குழப்பமும் கூச்சலும் உண்டாகும். சகோதரர்களிடையே உறவு திருப்தியாக இராது. வீண்பிரச்சினைக ளை பெரிதாக்காமல் விட்டுக்கொடுத்து போவது உத்தமம். திருமண சுபமுயறசி தடைப்படும். பொருளாதார நிலையில் நெருக்கடிகளும் பற்றாக்குறையால் கடன் வாங்க வேண்டிய சூழ்நிலைகளும் உண் டாகும். கொடுக்கல் உண்டாகும். எதிலும் எச்சரிக்கை யுடன் செயல்படாவிட்டால் சிக்கலில் சிக்கிக்கொள்ள நேரிடும். தொழில், வியா பாரம் உத்தியோக ரீதியாக மந்தமான நிலையும் உடல்சோர்வும் உண்டாகும்.

### குரு பகவான் துலாத்தில் விசாக நட்சத்திரத்தில் 19-08-2006 முதல் 20-10-2006 வரை

உடல் நலனில் அதிக அக்கறை செலுத்த வேணடும். ஜலத்தொடர்பான பாதிப்புக்கள் உண்டாகும். வயிற்றுக் கோளாறுகள் ஏற்பட்டு மருத்துவச் செல வுகள் கூடும். மனைவி, பிள்ளைகளுக்கு உடலநலக் குறைவு ஏற்படும். சகோதரர்க ளுடன் நல்ல உறவு இருக்காது. பொருளா தார நிலையில் நெருக்கடிகளும் பற்றாக் குறைகளும் உண்டாகும் கடன் தொல்லை அதிகமாகும். தேவையில்லாமல் சிலரைப்பகைத்துக்கொண்டு சிக்கலில் சிக்கிக் கொள்ள நேரிடும்.

தொழில், வியாபார நிலையில் மிகவும் மந்தமும் இலாபம இல்லாத சூழ்நிலையும் உண்டாகும் குடும்பத்தில் அமைதி இருக் காது. திருமண சுபமுயற்சி நடைபெற இடை யூறுகள் உண்டாகும்அரசியலில எதிர் பாராத திருப்பம் உண்டாகி வேதனை அடைவீர்கள்.

**நட்சத்திரப் பலன்கள்**

**பூரட்டாதி 4 ஆம் பாதம்:**

நட்சத்திரப் பலன்கள்
பூரட்டாதி 4 ஆம் பாதம்:

தொழில் வியாபார நிலையில் மிகவும் மந்தமான போக்கு நிலவும். தொழிலில் போட்டி,பொறாமையாளர்கள் சதி செய் வார்கள்.எடுக்கும் எந்தவொரு செயலையும் ஒருமுறைக்கு பலமுறை சிந்தித்துச் செயல்படுவது உத்தமம். பொருளாதார நிலையில் பணவரவுகள் தடைப்படும். கவனமாகச் செயல்பட வேண்டும்.

**உத்திரட்டாதி:**

உத்தியோக நிலையில் உயர் அதிகாரிகளிடம் தேவையற்ற வாக்கு வாதம் உண்டாகும். சிலருக்கு விருப் பமற்ற இடமாறுதலை எதிர்கொள்ள நேரிடும். வேலைப்பளு கூடும். வீண்பழி யை ஏற்கநேரிடும். மனம் ஒருநிலையில்

**ஜோதிட மேதை பாலமுருகன்**

இலலாமல் குழப்பமடையும். கொடுக்கல், வாங்கலில் முன் ஜாமீனைத் தவிர்ப்பது நல்லது.

**ரேவதி:**

மனத்தில் கவலை குடிகொள்ளும் உடல் நலத்தில் அதிக அக்கறை செலுத்த வேண்டிய காலமாகும். சுபமுயற்சி தடைப்படும். புத்திர பாக்கியம் உண்டாக இடையூறுகள் ஏற்படும். அசையாச்சொத்து வகையில் செலவுகள், வம்பு, வழக்குகளும் உண்டாகும். வெளியூர்ப் பயணங்கள் அலைச்சலை ஏற்படுத்தும். கணவன்-மனைவியிடையே உறவு சாதகமாக இருக்காது.

**பரிகாரம்:**

உங்கள் இராசிக்கு அஷ்டம ஸ்தான மான 8ஆம் வீட்டில் குருபகவான் சஞ்சரிப் பதால வியாழன் விரதம் மேற்கொண்டு குரு பகவானுக்கு கொண்டைக்கடலை மாலை, முல்லைமலர் அர்ச்சனை, மஞ்சள் துண்டு சாற்றி வணங்கி வழிபடுவது, ஏழை பிராமணர்களுக்கு உங்களால் இயன்ற உதவிகள் செய்வது, வயதில் பெரியவர் களுக்கு உதவி செய்வது மூலம் குருவருள் கிடைத்து நன்மைகள் உண்டாகும்

ஜென்ம இராசியில் இராகு, 7இல் கேது சஞ்சரிப்ப தால் சரபேஸ்வரரைத் தரிசிப்பது, பாம்புப் புற்றுக்கு பால் வார்ப்பது, அம்மன் வழிபாட்டினை மேற்கொள்வது மூலம் குடும்ப வாழ்வில் ஏற்படும் சோதனைகள் விலகி நற்பலன் உண்டாகும்.

(முற்றும்)

## இன்று ஒரு தகவல்

# ஒற்றுமை வேண்டும்

ஒரு நாட்டிலும் சரி ஒரு வீட்டிலும் சரி ஒற்றுமை இல்லை என்றால் அங்கே நிலைமை போர்க்களமாகி விடுவதை நாம் எல்லோரும் காண்கிறோம். இதனால்த்தான் ஒற்றுமையின் மகிமையைப்பற்றி எத்தனையோ அறிஞர்கள் அக்காலத்தில் இருந்தே கதைகள், கட்டுரைகள், கவிதைகள் மூலம் எமக்குத் தெரியப்படுத்தியுள்ளார்கள். இதனையெல்லாம் நம்மில் சிலர் படித்திருக்கின்றோம். ஆனால் படித்தபடி செயற்படுத்த முடியாமல் தவிர்க்கின்றோம். ஏன் என்று நினைக்கின்றீகள்? நாம் எல்லோரும் ஒற்றுமையின் நன்மை தீமைகளை உணர்ந்திருக்கவில்லை இதனாலேயே யாவர்க்கும் துன்பியல் நிகழ்வுகள் தொடர்கின்றன.

இதை உணர்த்த ஏராளமான கதைகள் இருக்கின்றன. அண்மையில் எமது கிராமத்து ஆசிரியர் ஒருவர் எனக்குச் சொன்ன கதையை இப்போது உங்களுக்கும் சொல்ல வேண்டும் என்பதே எனது ஆசை.

ஒரு கிராமத்திலே கொஞ்சம் தெரு நாய்கள் வசித்து வந்தன. அந்த நாய்கள் அக்கிராமத்தில் உள்ள மீன் சந்தை ஒன்றிலேயே தங்களுக்குரிய சாப்பாட்டுத்தேவைகளை பூர்த்தி செய்தன.

அண்மையில் வந்த ஆழிப்பேரலையினால் அக்கிராமத்தின் ஒரு பகுதி முற்றாக அழிந்து போனது. மறுபகுதியில் இருந்தவர்களும் இடம்பெயர்ந்து போய்விட்டார்கள். இதனால் மீன் சந்தையில் மனித நடமாட்டமே இல்லாமற் போயிற்று இந்நிலையில் இந்த நாய்களுக்கு பெரிய பஞ்சம் ஏற்படலாயிற்று.

என்ன செய்யலாம் என்று நாய்கள் யோசித்தனர்! பசியோ மிகவும் வருத்தியது. கூட்டாக உணவு கிடைக் கும் இடங்களைத் தோடி அலைந்தன. அயற்கிராமம் ஒன்றிலேயே அதிக உணவுகள் இருப்பதையும் அங்கே வேறு பல நாய்கள் நன்றாகச் சாப்பிட்டு அதிக அளவில் உணவு மிகுதியாக இருப்பதையும் கவனித்தன. அது ஒரு கடையின் பின்பக்கம் பெரிய தகரப்பீப்பாவின்உள்ளேயும் வெளியேயும் தாராளமாக உணவு வகைகள் இருந்தன. உடனே மெல்ல மெல்ல அவ் விடத்துக்குச் சென்றன. பலநாட்களாக ஒட்டிஉணர்ந்து போய் இருந்த தம் வயிற்றை இன்றாவது நிரப்புவோம் என எண் ணியவாறு சாப்பிடத்தொடங்கின

மறுகணம் எங்கிருந்தோ சில நாய்கள் கூட்டமாக ஒடி வந்தன, குரைத்தன, உறுமின சில கடித்தன அதன்பின் சொல்லவா வேண்டும் ? பெரியசண்டைஒன்று நடைபெற்றது. உருண்டன் புரண்டன மணற்தூசிகள் புகைமண்டலமாக எழுந்தன. இதற்கிடையில் சாப்பாடுமில்லை சாப்பாடு இருந்த இலைகளும் இல்லை. யாவும் மண்ணோடு சேர்ந்தன. அங்கிருந்த தகரப்பீப்பாவே தடம்புரண்டுஉருண்டு ஒடியது .

சற்று நேரத்தில் சண்டைஒய்ந்தது இருபகுதிநாய்களும் பலத்த காயங்களுடன் தம்தம் பக்கத்திற்கு திரும்பின சில நாய்களுக்கு இரத்தம் ஒழுகின. இன்னும் சில காதுக்ளை இழந்து கண்களை குருடாக்கின வேறுசில நெண்டிகள் ஆகின அக் கிராமத்து நாய்கள் கொஞ்சம் சிந்தித்து "நாங்கள் உண்ட மிகுதிதானே.. பாவம் மற்ற நாய்களும் சாப்பிடட்டும்" என்று விட்டிருந்தால் இந்தச் சண்டையே வந்திராது இழப்புகள் ஏற்படாது. நட்போடு ஆரோக்கியமாக இருந்திருக்கலாம். இது எதை எடுத் தியம்புகிறது? ஒற்றுமையின்மையைத்தானே.

நாய்கஞ்க்கு ஐந்தறிவுதானே! அவை எதையும் சிந்திக்கமாட்டா சரி நாய்களை விடுவோம். இப்போது ஆறறிவு படைத்த மனிதர்களைப் பார்ப்போம்.

இது எங்கள் நாடு நாம் எல்லோரும் இந்த நாட்டின் மக்கள் எல்லோரும் ஒற்றுமையாக இருப்போம் என்று நினைக்கிறோமா? ஒரு போதுமேயில்லை. இனம்,மதம்,மொழிஎன்ற ரீதியில் எத்தனை வேறுபாடுகள்? பெரும்பான்மை ,சிறுபான்மை என்ற வகையில் எத்தனை பாகுபாடுகள்?

இப்படியே பல நாடுகளில் ஒற்றுமையின்மையால் பெரும்போரே நடைபெறுகின்றன இதில் வெற்றியடைவதற்காக மக்களே போர்ப் பயிற்சியும் பெற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது.

இந்த நிலை ஏன்...? இதை விட்டு எல்லோர் மனங்களிலிருந்தும் பகைமையை அகற்றுவதற்காக அன்பு, கருணை சமத்துவம் போன்ற இன்னும் பல பண்புகளைப் புகட்டும் ஆன்மீகக் கல்வியை விரிவாக அவரவர் இன மத மொழி அடிப்படையில் கட்டாயமாக கற்க வழி வகுக்க வேண்டும்.இக்கல்வியை சிறுவர் முதல் பெரியோர் வரை கற்றுக் கொண்டால் அறநெறிகளின்படி அமைதியான வாழ்க்கையையே எல்லோரும் விரும்புவார்கள் இதன் பின் எப்படியிருக்கும் எமது வாழ்க்கை...? எல்லோரும் சம அந்தஸ்த்துடன் ஒற்றுமையாக வாழலாம்தானே

**எஸ்.எஸ். காசிப்பிள்ளை**
**எழுதுமட்டுவாளூர்**

# (உ/த) இல் 3 ஏ பெற்ற அனைவருக்கும் பல்கலைக்குச் செல்ல வாய்ப்புக் கிடையாது

## பரீட்சை ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் 'ஏ' தரத்திலான மூன்று சித்திகளைப் பெற்ற அனைவருக்கும் பல்கலைக் கழகங்களுககு நுழைவதற்கான வாய்ப்புக் கிடைக்காது என பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

2005ஆம் ஆண்டு நடத்தப்பட்ட க.பொ. த. உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களிலும் "ஏ" சித்திகளைப் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 168ஆகும் இதில் 2 ஆயிரத்து 910 பேர் பாடசாலை விண்ணப்பதாரிகள் 258 பேர் தனிப்பட்ட ரீதியில் விண்ணப்பித்தவர்கள்.

இம்முறை இடம்பெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் தொடர்பாக பரீட்சைத் திணைக்களத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே பரீட்சை ஆணையாளர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இம்முறை இடம்பெற்ற கணிதப் பாடத்தில் 'ஏ' அல்லது 'பீ' சித்திகளை ஒரு சிலரே பெற்றுள்ளதுடன் 'சீ' மற்றும் 'எஸ்' சித்திகளைப் பலர் பெற்றுள்ளனர்.

ஆங்கிலம் (சாதாரண) பாடத்தில் 'ஏ' சித்திகளைப் பெற்ற விகிதாசாரம் 2.19 ஆகும் 'பீ' விகிதாசாரம் 2.79 ஆகும் 'சீ' விகிதாசாரம் 7.30 ஆகும் 'எஸ். விகிதாசாரம் 12.53 ஆகும் சித்தியடையாத விகிதாசாரம் 75.19 ஆகும் எனவே ஆங்கிலப் பாடத்தில் 57.56 சதவீத மானவர்கள் சித்தியடைந்திருக்கவில்லை.

இம்முறை பாடசாலை மட்டத்தில் இப்பரீட்சைக்கு 1.97, 99 பேர் விண்ணப்பித்திருந்தனர் இதில் 1.73,734 பேர் மாத்திரமே தோற்றியிருந்தனர்.

தனிப்பட்ட ரீதியில் 48, 604 பேர் இம்முறை விண்ணப்பித்திருந்தாலும் கூட இதில் 30,296 போ மாத்திரமே பரீட்சையில் தோற்றிருந்தனர்.

இதேவேளை, மூன்று பாடங்களிலும் சித்தி பெற்று சாதாரண பொது பரீட்சையில் 30க்கும் குறைவான புள்ளிகளை 3ஆயிரத்தி 578 பேர் பெற்றுள்ளனர் என பரீட்சை ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-9)

# இலங்கைப் படை ஹெயிட்டி பயணம்

(கொழும்பு)

ஹெயிட்டி நாட்டில் அமைதி முயற்சியில் ஈடுபடும் பொருட்டு இலங்கைப் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த ஒரு குழு அடுத்தவாரம் ஹெயிட்டி செல்லவுள்ளது. முப்படையினரையும் சேர்ந்த 192 படையினர் இந்தக்குழுவில் அடங்குகின்றனர் ஒரு தொகுதி படையினர் ஹெயிட்டியில் அமைதி முயற்சியில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-8)

# ஸ்ரீ.சு.கவின் வேட்பாளராக மஹிந்த நீடிப்பாரா?

## ஐ.தே.க.சந்தேகம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உண்மையான வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷதானா என்று ஐக்கிய தேசியக் கட்சி சந்தேகம் எழுப்பியுள்ளது. அக் கட்சியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணா நாயக்க இது குறித்து கருத்துத்தெரிவிக்கையில்,

சுதந்திரக்கட்சியின் தலைவி சந்திரிகா குமார துங்கா மற்றும் அனுரா பண்டாரநாயக்க ஆகியோரின் மஹிந்த ராஜபக்ஷ மீதான விமர்சனங்களால் அக்கட்சி குழப்பத்தில் இருப்பது தெளிவாகியுள்ளது.

கட்சியின் ஒழுங்கை மஹிந்த ராஜபக்ஷ மீறியிருபபதாக சந்திரிகா குற்றம் சாட்டியிருப்பதால் மஹிந்தவுக்கு முட்டுக்கட்டை போடும்வகையில்பாராளுமன்றத்தை கலைத்துவிட்டு பாராளுமன்றத் தேர்தலை சந்திரிகா நடத்த முயற்சிக்கக்கூடும்.

சுதந்திரக்கட்சியின் மத்திய குழுவால் மஹிந்த ராஜபக்ஷதான் வேட்பாளர் என்று அறிவிக்கப்பட்டிருப்பினும் அவர் தொடர்ந்து உத்தியோகப்பூர்வ வேட்பாளராக இருப்பாரா, என்ற சந்தேகம் எழுந்துள்ளது. அண்மைய நிகழ்வுகளைப் பார்க்கும் போது ஜே.வி. பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமயவின் வேட்பாளராகத் தான் மஹிந்த ராஜபக்ஷ இருக்கக் கூடும் எனத் தெரிகிறது. சுதந்திரக் கட்சயின் வேட்பாளராக அவர் இருக்கமாட்டார். என தெரிகிறது என ரவி கருணாநாயக்க தெரிவித்தார். (த-4)

# கதிர்காமர் படுகொலை விவகாரம் தொடர்பில் வஜிர விஜயகுணவர்த்தன மீது விசாரணை

(கொழும்பு)

கொழும்பு நகர இராணுவ கட்டளைத் தளபதியாக பணியாற்றிய வஜிர விஜயகுணவர்த்தனவின் செயற்பாடுகள் குறித்து விசாரணை நடத்த குழு நியமிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷமன் கதிர்காமர் கொல்லப்பட்டதையடுத்து அவர் மேற் கொண்ட நடவடிக்கைகள் மீது இந்த விசாரணை நடத்தப்பட உள்ளது.

முப்படைத் தளதியான தயா சந்தகிரி தலைமையிலான இக்குழுவில் மேஜர் ஜெனரல் லாரென்ஸ் பெர்னாணடோ விமானப்படைத் தளபதி றோசான் குணதிலக்க தளபதி ஜயந்த பெரேரா மற்றும் லெப் கேணல் டி.கப்பெடிவலன ஆகியோர் இடம்பெற்றுள்ளதாக இராணுவத் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

கதிர்காமர் கொலைக்குப் பின்ன் 20 நிமிடங்க ளுக்குள் கொழும்பு நகரை முற்றுகையிட்டு பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரித்தவர் வஜிர விஜயகுணவர்த் தன என்று அப்போது கூறப்பட்டது.

அதேபோல் முப்படைத் தளபதி தயாசந்தகிரியின் வேண்டுகோளுக்கு ஏற்ப கொழும்பு பாதுகாப்பு குறித்த செயற்திட்டத்தையும் அவர் உருவாக்கியிருந்தார்.

அந்தச் சூழலில் ஒகஸ்ட் 21 ஆம் திகதி தொலைபேசி தகவலின் அடிப்படையில் அவர் பணி இடமாற்றம் செய்யப்பட்டு தற்போது புதிய பணிக்கான ஒதுக்கீட்டிற்காக காத்துள்ளார்.

விஜயகுணவர்த்தன மாற்றத்துக்கு தான் காரணம் எதுவும் இல்லை என்றும் இராணுவத் தளபதி சாந்த கொட்டேகொடதான் அம்முடிவை மேற்கொண்டதாகவும் முப்படை தளபதி தயா சந்தகிரி கூறியிருந்தார்.

தயா சந்தகிரிக்கும் விஜயகுணவர்த்தனவுக்கும் இடையேயான முறுகல்தான் இந்த பிரச்சினைக்குக் காரணம் என்றும் இராணுவத்தரப்புச் செய்திகள் கூறுகின்றன. (ற)

# கைதான தமிழ் இளைஞர்கள் மீது தொடர்கிறது விசாரணை

(கொழும்பு)

தங்காலையில் உள்ள கடற்படை முகாமை படமெடுத்ததாகத் கூறிக்கைது செய்யப்பட்ட இரு தமிழ் இளைஞர்களும் அது குறித்து விளக்கம் அளித்துள்ளனர்.

கடற்படை முகாமையும் உலங்குவானூர்திப் பிரிவையும் புகைப்படம் எடுத்ததாக கூறி கடந்த திங்கட்கிழமை இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கடற்படையினர் இவர்களை கைது செய்து தங்காலை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

தங்காலை கடற்படை முகாம் மற்றும் உலங்குவானூர்த்திப் பிரிவை பல்வேறு கோணங்களில் எடுத்த 27 புகைப்படங்கள் இவர்களின் புகைப்படக் கருவியில்இருந்ததாக தங்காலை தலைமையக பொலிஸ் பரிசோதகர் எம்.எல்.எல் மகாகெதர தெரிவித்தார்.

சந்தேக நபர்கள் 16 மற்றும் 18 வயதையுடையவர்கள் என்றும் பெலியத்தையிலுள்ள உணவகம் ஒன்றில் சேவையாற்றுபவர்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்களில். ஒருவர் இங்கு சேவைக்கு வந்து ஒரு வாரம் என்றும் மற்றையவர் சேவைக்கு வந்து ஒரு மாதம் என்றும் பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இவ்விருவரும் வெள்ளவாய பிரதேசத்தைச் சேர்ந்த தோட்டமொன்றில் வசிப்பவர்கள் எனவும் தெரிய வந்துள்ளது. இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் ஆர்வத்தின் காரணமாக தாங்கள் இந்தப் புகைப்படங்களை எடுத்ததாகக் கூறியுள்ளனர்.

எனினும் அது தொடர்பில் சில பிரச்சினைகள் இருப்பதனால் விசாரணைகள் தொடர்வதாக பொலிஸார் தெரிவித்தனர். (ற)

# இந்துமா மன்றத்தின் கோரிக்கைக்கு தேர்தல் ஆணையாளர் இணக்கம்

ஜனாதிபதி தேர்தலுக்கான திகதியை நிர்ணயிக்கும் போது கந்தசஷ்டி விரத காலப்பகுதியை கவனததிற் கொள்வதாகத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸ்நாயக்க அகில இலங்கை இந்துமா மன்றத்திற்கு தெரிவித்துள்ளார்.

இந்து மக்களின் கந்தசஷ்டி விரதமானது நவம்பர் மாதம் 2ஆம் திகதி தொடக்கம் 8ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படுகிறது இக்காலப்பகுதியில் ஜனாதிபதி தேர்தல் நடாத்துவதை தவிர்த்துக்கொள்ளும்படி அகில இலங்கை இந்து மாமன்றம் வேண்டுகோள் விடுத்ததையடுத்தே தேர்தல் ஆணையாளர் இந்த உடன்பாட்டைக் கெரிவிக்துள்ளார். (ர-7)

# சோமாலியாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கப்பல் பயணிகள், கப்டனுடன் விடுவிப்பு

(கொழும்பு)

சோமாலியாவில் ஆயுததாரிகளால் 11 வாரங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த உலக உணவுத் திட்டத்தின் கப்பல் கடந்த புதன்கிழமை விடுவிக்கப்பட்டது.

இந்த நிலையில் கப்பலின் கப்டனான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மகாலிங்கம் மற்றும் தன்ஸானியப் பொறியியலாளர் உட்பட மேலும் 10 பணியாளர்கள் கடந்த புதன் கிழமை விடுவிக்கப்பட்டதாக ரொய்ட்டர் செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

நிவாரணப் பொருட்களுடன் சென்ற இந்தக் கப்பல் கடந்த ஜூன் மாதம் 27ஆம் திகதி கடல் கொள்ளையர்களினால் மடக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டது.

முதலில் குறித்த கப்பலை விடுவிக்க 500 ஆயிரம் டொலர்களை கடல் கொள்ளையர்கள் கோரிய போதும் பின்னர் கப்பலில் உள்ள 850 தொன் அரிசியை அவர்கள் பணயமாகக் கோரினார்கள்.

இந்த நிலையில் தற் சமயம் அரிசியை இறக்கும் பணிகளுக்கு குறித்த கப்பல் சென்று கொண்டிருப்பதாகவும் இன்னும் 3 நாட்களுக்குள் கப்பல் அதன் உரிமை நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ர-9)

# அமைதி வழியிலான தீர்வில்லையேல் மீண்டுமொரு யுத்தம் வெடிக்கும்

## கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒரே குரலில் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

தமிழர்களுக்கான அமைதி வழியிலான தீர்வைத் தர அரசு மறுத்தால் மீண்டுமொரு யுத்தம் வெடிக்கும் நிலை உருவாகுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவில் நடைபெற்ற தமிழ்த் தேசிய எழுச்சிப் பிரகடன நிகழ்விலேயே அவர்கள் இதனை வலியுறுத்தியுள்ளனர்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற இந்நிகழ்வில் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூறிய கருத்துகள் வருமாறு,

### சிவநாதன் கிஷோர்

நாட்டில் இனி யுத்தம் வந்தால் தென்னிலங்கை எப்போதும் நிம்மதியாக இருக்காது. வடக்கு -கிழக்கு தவிர்த்த பகுதிகளில்தான் யுத்தம் நடைபெறும்.

தமிழ் மக்களின் உரிமையை நிராகரித்தால் தென்னிலங்கை நிம்மதியாக வாழ முடியாது.

இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் பல உயிர்களை [illegible] கொடுத்த போதும் தாக்குதல் [illegible] போதும் அதை சந்தித்த விடுதலைப் புலிகள் பொறுமை காத்து வருகிறார்கள்.

இங்கே விடுதலைப்புலிகள் யுத்தத்தை தொடங்குவார்கள் என்றும், புலிகள் தலையிலே சர்வதேச நாடுகள் குண்டுபொழி[illegible] என்றும் கனவு கண்டார்கள்.

ஆனால் விடுதலைப்புலிகள் பொறுமையோடு அரச கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து போராளிகளை மீள அழைத்துள்ளனர்.

இனி ஒரு யுத்தம் ஏற்பட்டால் வடக்கு-கிழக்கில் ஏற்படாது. ஏனைய இடங்களில்தான் யுத்தம் நடக்கும்.

தமிழ் மக்கள் மீது இனி ஒரு யுத்தம் திணிக்கப்பட்டால் அதை விடு தலைப் புலிகள் மட்டும் எதிர்கொள்ளமாட்டார்கள். அவர்களின் காலத்தில் ஒட்டுமொத்த தமிழீழ மக்கள் அனைவருமே எதிர்கொள்வோம். எங்கள் தலைவன் இருக்கிறான் நாம் நிச்சயம் தமிழீழம் வெல்வோம்.

### மா.க.ஈழவேந்தன்

இந்திய அரசு தனது வெளியுறவுக் கொள்கையை மாற்றவேண்டும். 1976இல் வட்டுக்கோட்டையில் விட்டுக் கொடுக்காமல் எடுத்த தீர்மானம்தான் இழந்ததைப் பெறுவதற்கான தீர்மானம்.ஆனால் அன்றைய சிறிமாவோ பண்டாரநாயக்க எங்களைப் பார்த்துக் கூறினார்.என்ன தீர்மானம் போடுகிறீர்கள்? உங்களை சிறையிலடைத்து சித்திரவதை செய்யவேண்டும் என்றார்.

அதற்குப் பதில்கூறினோம்."உங்கள் கணவர் பண்டாரநாயக்கதான் 1926இல் இலங்கை ஒரு நாடு அல்ல தீவு என்றும், கண்டிச் சிங்களவர், கரையோரச் சிங்களவர் ஒருபுறமும் தமிழர்கள் ஒருபுறமுமாக எல்லை பிரித்து வாழ்கிறார்கள் என்றார்" எனச் சொன்னோம்.

இதையடுத்து எங்கள் மீது 65 வழக்குகள் போடப்பட்டன. மூன்று நீதிபதிகள் முன்னிலையிலான விசாரணையில் இல்லாததைப் பெறுவதற்காகப் போராடவில்லை. இழந்ததைப் பெறவே போராடுகிறோம் என்று சட்டத்தரணி முருகேசன் திருச்செல்வம் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் 1337ஆம் ஆண்டோடு தமிழராட்சி பறிபோய்விட்டது.

ஆனால், 1619ஆம் ஆண்டு வரை மணிமுடி தாங்கி ஆட்சி நடாத்தினான் சங்கிலிய மன்னன்.

இந்த வன்னிப் பெருநிலப் பரப்பில் 1813ஆம் ஆண்டுவரை 19ஆம் நூற்றாண்டின் தொடக்கம்வரை தமிழன பண்டாரவன்னியன் ஆட்சி புரிந்தான் என்று வாதித்தோம்.

இந்த நாளில் அந்த பண்டாரவன்னியன் மண்ணில் நின்று இதை நினைத்துப் பார்க்கையில் வீரம் பீறிடுகிறது.

7ஆம் நூற்றாண்டிலேயே திருகோணமலை குறித்து ஞானசம்பந் தர் பேசியிருக்கிறார். ஆனால் இன்று அந்த கோணேசா... அரு ணேசா என்ற குரலுக்கு பதில் புத்தம் சரணம் கச்சாமி...தம்மம் சரணம் கச சாமி...தமிழன் மரணம் கச்சாமி என்ற குரல் அல்லவா ஒலிக்கிறது?

புத்தர் என்று சிங்களம் பேசினார்? சிங்களத்தின் குறியீடாக புத்தர் சிலையை திருமலையில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

கதிரைவேற்பிள்ளை சொன்னார் "கொழும்பை இழந்தாலும் திருகோணமலையை இழந்துவிடக் கூடாது என்று" திருகோணமலையை யார் வைத்திருக்கிறார்களோ அவர்களே இந்துமா சமுத்திரத்தின் திறவுகோலை வைத்திருப்பவர்கள்.

நிலவளம், நீர்வளம், கடல் வளம், தொழில்வளம் அனைத்தையும் இழந்த நாம் அருள்வளம் இழக்கிறோமா. வடக்கு-கிழக்கை இணைப்பது திருகோணமலை. திருகோணமலை இல்லையெனில் மட்டக்களப்பும் யாழ்ப்பாணமும் இல்லை. தமிழனின் நிலத் தொடர்ச்சி பறிபோய்விடும்.

உயிரையே இழந்தாலும் திருமலையை இழக்கமாட்டோம். திருமலை இல்லாத தமிழீழமா? நினைத்துப் பார்க்க முடியாது. திருமலையில் இப்போது நடப்பது மண்ணைக் காக்கிற போராட்டம். வாழ்வைத் தான் இழந்திருக்கிறோம். ஆன்மாவையுமா இழப்பது?

1986ஆம் ஆண்டு ஐ.நா சபையின் 40ஆம் ஆண்டுக் கூட்டத்தில் பங்கேற்கச் சென்றபோது அங்குள்ளவர்களிடமும் அமெரிக்க நிர்வாகத்திடமும் சொன்னோம். ஐ.நா சாசனப்படி இனப்படுகொலைக்கு ஆளாகும் ஒரு இனத்துக்கு கிளர்ந்தெழும் உரிமை உண்டு என்பதை விளக்கினோம்.நம் தாயின் மணிக்கொடியாம் தமிழீழ தேசியக் கொடி. அந்த ஐ.நா மன்றத்திலே விரைவில் பட்டொளி வீசிப்பறந்திடும். ஆம் பார்த்ததடா தமிழீழம்! என்ற இலட்சிய முழக்கம் கொள்வோம்.

### திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன்

தமிழீழ விடுதலையை வென்றெடுக்கும் இறுதிக் காலத்தில் நாம் இருக்கிறோம்.

விடுதலைப்புலிகள் ஏன் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலிருந்து உள்ளெடுக்கப்பட்டார்கள் என்று கேள்வி கேட்கப்பட்டது. அப்பிரதேசத்தில் எங்களுடைய போராளிகள் அரசியல் பணிகளை செய்கிற சூழ்நிலை இல்லை. எங்கள் அரசியல் பணிகளை முடக்கி வைக்கும் நடவடிககைகளில் இராணுவம் இயங்கியதால் நாம் போராளிகளை மீளப்பெற்றோம்.

யுத்தநிறுத்த ஒப்பந்தப்படி அரசியல் பணிகளை செய்கிற எங்கள் போராளிகள் மீது கைது,தாக்குதல், கொலை நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. எனவே நாங்கள் எங்கள் பிரதேசங்களுக்குள் எங்கள் போராளிகளை உள்வாங்கிக் கொண்டோம்.

இப்போது யுத்தநிறுத்த ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகளை எங்கே நடத்துவது என்று பேசப்பட்டு வருகிறது. அரசு ஏன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் பேசலாம் என்று அழைக்கிறது?

கடந்த காலங்களில் வெளிநாடுகளில் பேச்சுக்கள் நடாத்தப்பட்ட போது தமிழ்மக்களின் உண்மை நிலைகள் சர்வதேச சமூகத்திற்கு தெரியவந்தது. அதைத்தடுக்கவே இப்போது இலங்கைக்குள்ளேயே பேச்சுக்கள் நடாத்த வேண்டும் என்று சொல்கிறார்கள்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தன்மையை ஓரளவுக்கு சர்வதேச சமூகம் புரிந்துகொண்டுள்ளது.

நாம் இப்போது விடுதலையை வென்றெடுப்பதற்கான கடைசிக் காலகட்டத்தில் இருக்கிறோம். கடந்த மூன்றரை ஆண்டுகால யுத்த நிறுத்த ஒப்பந்தம் என்ன சாதித்தது? நாளை யுத்தமா? போர்வெடிக்குமா? பேரழிவு ஏற்படுமா?என்கிற அச்சம்தான் ஏற்பட்டிருந்தது.அதன்மூலம் தீர்வொன்றும் வரவில்லை.

சர்வதேச சமூகத்தின் மீதான நம்பிக்கையோடு நாம் பேச்சுக்களில் நுழைந்தோம்.ஆனால் பேசப்பட்டவை எவையும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. சமஷ்டி கோரிக்கையைக் கூட பரிசீலிக்க தயாராக இருப்பதாகக் கூறி தன்னாட்சி அதிகார சபையை முன்வைத்தோம். ஆழிப் பேரலை மீளமைப்புக்கான பொதுக் கட்டமைப்பை முன்வைத்தோம்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பிரதேசமான மாத்தறையில் நிரந்தர வீடுகள் கட்டிமுடிக்கும் பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளன. ஆனால் தமிழர் தாயகப் பிரதேசத்தில் குறிப்பாக திருகோணமலையில் தற்காலிக கொட்டில்களை அமைப்பதற்கான காணிகள் கூட ஒதுக்கப்படவில்லை.

தமிழீழ விடுதலைப்புலிகள் இறங்கி வந்ததற்குக் காரணமே சர்வதேச சமூகத்தின் மீதான நம்பிக்கையே. ஆனால்நாட்டில்உள்ள அனைவரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான். தொப்பிகளின் நிறங்கள் மட்டும்தான் மாறியிருக்கின்றன.

பேரினவாத ஜே.வி.பியும் ஜாதிக ஹெல உறுமயவும் மஹிந்த ராஜபக்ஷவுடன் நிபந்தனைகளை விதித்துக் கூட்டுச்சேர்ந்துள்ளன. ஒற்றையாட்சி முறையை வலியுறுத்துகின்றன்.

ஜாதிக ஹெல உறுமயவோ இதை ஒரு பௌத்த நாடு என்று ஏற்க வேண்டும் என்கிறது. திருகோணமலையில் புத்தர் சிலையை வைத்ததன் நோக்கமே ஆக்கிரமிப்புத்தான். பௌத்த இனவாதம் பேசுகிற கோட்பாட்டின் கீழ் தீர்வுகாணவே முடியாது.

எங்களின் விடுதலைக்கான காலம் கனிந்துகொண்டிருக்கிறது. வரலாறு எங்களுக்கு வழிகாட்டி என்று தேசியத் தலைவர் கூறியதைப் போலவே விடுதலைக்கான வெற்றிக் காலத்தில் நாம் நிற்கிறோம்.இனிநாம் பேசிப் பயனில்லை.

இங்கே தமிழ் மக்கள் திரண்டிருக்கிறீர்கள். பயங்கரவாதிகள் பட்டியலல் புலிகளை வைத்திருக்கும் நாடுகள் இதைப் பார்த்து எம்மைப் புரிந்து கொள்ள வேண்டும்.

தேசியத் தலைவரோடு இணைந்து நிற்கும் நீங்கள் தலைவருக்கு பக்கத்தில் நெருங்கி வாருங்கள். நாளையே நம் விடுதலையை வென்றெடுப்போம்.

(த-4)





உள்ளூராட்சி வார நிகழ்வின் ஓர் அங்கமாக யாழ். மாநகராட்சி மன்றத்தின் ஏற்பாட்டில் யாழ் பொதுசன நூலகத்திற்கு அண்மையில் கிடைக்கப்பெற்ற புதிய நூல்களின் கண்காட்சி நேற்று காலை யாழ். பொதுசன நூலகத்தில் நடைபெற்றது.

இக் கண்காட்சியை யாழ். மாநகரசபை ஆணையாளர் சீ. வீ.கே.சிவஞானம் திறந்து வைத்தார். இந்நூலகக் கண்காட்சியை பலர் பார்வையிடுவதைப் படங்களில் காணலாம்.

(படங்கள்:-ஞா.ஐங்கரன்)

## முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பு தனித்துப் போட்டியிட முடிவு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம் தேசிய கூட்டமைப்பு தனித்துப் போட்டியிட முடிவு செய்துள்ளதாக அதன் தலைவர் ஹாபிஸ் நசீர் அஹமத் தெரிவித்திருக்கிறார்.

கடந்த புதன்கிழமை இரவு அவசரமாகக் கூடிய முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பின் அதி உயர் பீடத்தின் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் சமூகத்தின் அரசியல் அபிலாஷைகள் மற்றும் தேவைகள் தொடர்பாக முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பு இரு பிரதான கட்சிகளின் வேட்பாளர்களிடம் முன்வைத்த கோரிக்கைகள் குறித்து இவ்விரு கட்சிகளும் எழுத்து மூல உத்தரவாதத்தை தராதமையினால் தமது கட்சி இம்முடிவை எடுத்துளளதாகவும் ஹாபிஸ் நசீர் அஹமத் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் சமூகத்தின் அபிலாஷைகள் மற்றும் தேவைகளை முன்னிலைப்படுத்தி ஜனாதிபதித் தேர்தலில் தமது கட்சி தனித்துப் போட்டியிடுவது தொடர்பான விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு அடுத்த வாரம் நடத்தபடவிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

(ந)

## தமிழ் மூதாட்டி குத்திக்கொலை

(கொழும்பு)

கொழும்பில் பம்பலப்பிட்டிப் பகுதியில் உள்ள அரச தொடர் மாடிக் குடியிருப்பில் வசித்து வந்த தமிழ் மூதாட்டி ஒருவர் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 2ஆம் திகதி இடம்பெற்ற இச் சம்பவத்தில் திருமதி குலசிங்கம் (வயது-80) என்ற மூதாட்டியே கொலை செய்யப்பட்டவராவார்.

இவர் தனியாக வீட்டிலிருந்த போது உள்ளே புகுந்த திருடனொருவன் இவரைக் கழுத்தில் கத்தியால் குத்திவிட்டு வீட்டு மேசையிலிருந்த பணத்தை எடுத்துக்கொண்டு தப்பியோடியுள்ளான்.

கொலை செய்யப்பட்ட மூதாட்டியின் மகள் அலுவல்கள் காரணமாக வெளியே சென்றுவிட்டு வீடு திரும்பிய போது மூதாட்டி இரத்த வெள்ளத்தில் கிடந்ததாகவும் அதன் பின்னர் அயலவர்களின் உதவியுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வேளையில் சிகிச்சைகள் பலனளிக்காமல் இறந்துள்ளதாகவும் தெரியவருகிறது.

இது தொடர்பாக சந்தேக நபர் ஒருவரைத் தேடி மகரகம பகுதிக்கு பொலிஸ் குழுவொன்று அனுப்பி வைக்கபடடுள்ளதாக பம்பலப்பிட்டி பொலிஸ பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

(ந)

## வலயக் கண்காட்சியும் கலை நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

தீவக்கல்வி வலயமும் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையமும் இணைந்து நடாத்தும் வலயக் கண்காட்சியும், கலை நிகழ்வும் இன்று காலை 9.00மணிக்கு யா/வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் ப.கணபதி உதவிக் கல்விப் பணிப் பாளர் (முன்பள்ளிக கல்வி,முறைசாராக் கல்வி) தலைமையில் நடைபெற வுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஐ.குகனேந்திரனும்,சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் உதவிக் கல்விப்பணிப்பாளரும், மாவட்ட முன்பள்ளி இணைப்பாளருமான சி. சிவனேசன்,தீவக முன்பள்ளி மேம்பாட்டு நிலையத் தலைவர் பொ.யமுனா தேவி,ஊர்காவற்றுறை பிரதேச முன்பள்ளி மக்கள் கட்டமைப்புத் தலைவர் கு. இளமாறன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வுக்கு தீவக லயன்ஸ் கழகமும் லயன் கு. கங்கைவேணியனும் சேர்ந்து அனுசரணை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (சுஜி)

# வீரப்பன் வாழ்வும் வதமும்

## மீள் பார்வை

என். சொக்கன் 24

முதலாவதாக, ராஜ்குமார் கடத்தப்பட்டு இரண்டு வாரங்கள் கழிந்தபிறகு, அப்போதைய கர்நாடக முதல்வர் எஸ். எம். கிருஷ்ணாவின் மருமகன் வி. ஜீ. சித்தார்த்த்தா மூலமாக ஐந்து கோடி ரூபாய் திரட்டப்பட்டதாகவும் அந்தத் தொகை அப்போதைய தமிழக முதல்வர் கருணா நிதியின் வீட்டில் வழங்கப்பட்டதாகவும் குறிப்பிடுகிறார் தினகர். அங்கிருந்து அந்தத்தொகை 'நக்கீரன்' கோபால் மூலமாக (தினகரின் இந்தக் குற்றச்சாட்டை நக்கீரன் கோபால் மறுத்திருக் கிறார் . இதைக் கண்டித்து தினகர் மீது நீதிமன்றத்தில் மானநஷ்ட வழக்குத் தொடர்ந்திருககிறார் அவர்), வீரப்பனுக்கு அனுப்பப்பட்டதாம்.

ஆனால் இந்தத் தொகை போதாது என்று வீரப்பன் தெரிவித்ததும் ஆகஸ்ட் மாத இறுதியில் அடுத்த தவணையாக மேலும் மூன்று கோடி ரூபாய் பணம் சேர்க்கப்பட்டது. இதில் ஒரு கோடியை ராஜ்குமாரின் மனைவி பர்வதம்மாவும் மேலும் இரண்டு கோடியை கர்நாடக திரைப்படக் கூட்ட மைப்பு நிறுவனமும் தந்ததாகச் சொல்கிறார் தினகர். இந்தத் தொகையும் 'நக்கீரன்' கோபால் மூலமாக வீரப்பனிடம் போயிருக்கிறது என்கிறார் தினகர்.



அடுத்து செப்டம்பர் மாதம் மூன்றாவது வாரத்தில் முதல் முறை அனுப்பியது போலவே மேலும் ஐந்து கோடி ரூபா யை வி. ஜீ. சித்தார்த்தா அனுப்ப, இந்தத்தொகையும் கருணாநிதி வீட்டில் சேர்க்கப்பட்டு பின்னர் கூநக்கீரன் கோபால் அதை வீரப்பனிடம் கொண்டு சென்றதாகச் சொல்கிறார் தினகர்.

ஆனால் இந்தத் தொகைகள் எவையும் வீரப்பனுக்கு முழு மையாகச் சென்று சேரவில்லை என்று டாக்டர் பானுவிடம் அவனே சொல்லியிருப்பதாக தினகர் குறிப்பிடுகிறார். இதனால் 'நக்கீரன்' கோபாலின் மீது வீரப்பன் ரொம்ப அதிருப்தியாக இருந்தானாம்.

ஆகவே வீரப்பன் கேட்ட கடைசித் தவணையான ஐந்து கோடி ரூபாயை கோபாலிடம் கொடுத்து அனுப்பாமல் பழ. நெடுமாறன் தலைமையிலான தூதுக் 'குழுவினருடன் அனுப்புவதாக முடிவானது என்றும் தினகர் செரல்கிறார்.

இந்தப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்ட டாக்டர் பானு வுக்கும் அவருடைய தோழர்களுக்கும் நவம்பர்மாத மத்தியில் ராஜ்குமாரின் மனைவி பர்வதம்மா இரண்டு கோடி ரூபாய் பரிசளித்ததாக தினகரின் புத்தகம் குறிப்பிடுகிறது.

கடைசியாக வீரப்பனுக்கு அனுப்பப்பட்ட கடைசித் தவணைத் தொகையை அப்போதைய கர்நாடக டி. ஐ. ஜி ஜெயப்பிரகாஷ் கொண்டு சென்றிருக்கிறார் என்றும் செப்டம்பர்14ஆம் தேதி பழ. நெடுமாறன் தலைமையிலான தூதுக் குழுவினர் அந்தத் தொகையை வீரப்பனிடன் வழங்கிய பிறகுதான் ராஜ்குமாரை விடுவிக்க வீரப்பன் கட்டளையிட்டதாகவும் தினகர் சொல்கிறார்.

இப்படியாக ராஜ்குமாரை மீட்பதற்கு மொத்தம் இருபது கோடி ரூபாய் தரப்பட்டது என்று தேதி வாரியாகப் பட்டியலிடுகிறார் தினகர். ஆனால் அப்போதைய கர்நாடக முதல்வர் எஸ். எம் கிருஷ் ணாவில் தொடங்கி மேற்சொல்லியிருக்கும் அனைவரும் இந்த விஷயத்தை மறுக்கிறார்கள். ராஜ் குமாரை விடுவிப்பதற்காக வீரப்பனுக்கு எந்தப் பணமும் தரப்படவில்லை என்று வாதிடுகிறார்கள் .

ராஜ்குமார் கடத்தல் நாடகம் முடிவடைந்த பிறகு, 2001 ஆம் ஆண்டு தமிழகத்தில் ஆட்சி மாற்றம் நிகழ்ந்தது. புதிய முதலமைச்சராக ஜெயலலிதா பதவியேற்றார்.

அதன் பின் மேற்கண்ட விவகாரங்கள் அனைத்தும் மறுபடி கிளறப்பட்டன. நிஜத்தில் வீரப்ப னுக்குப் பணம் தரப்பட்டதா அதில் யாருக்கெல்லாம் தொடர்பு இருக்கிறது என்று விசாரணைகள் நடைபெற்றன.

2002 ஆம் ஆண்டு ஜூன் மாதம் தமிழக அதிரடிப்படையின் தலைவரான வால்டர் தேவாரம் தர்ம புரியில் நிருபர்களைச் சந்தித்தார் . அப்போது அவர் ராஜ்குமாரை மீட்க சுமார் 10 கோடி ரூபாய் கைமாறியுள்ளது என்றார்.

அதே சமயத்தில் ராஜ்குமார் கடத்தலில் நக்கீரன் ஆசிரியர் கோபால் மற்றும் நிருபர் சிவசுப்பிர மணியத்துக்கு தொடர்பு இருப்பதாக சி. பி. சி. ஐ. டி போலீஸார் வழக்குத் தொடர்ந்தார்கள். இந்த விசாரணையின் போது அரசுத்தரப்பு வழக்கறிஞர் சங்கரநாரயணன், 'ராஜ்குமாரை விடுவிப்பதற் காக ரூ. 40கோடி வரை வீரப்பனுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தத்தொகையில் ரூபா10 கோடிவரை ராஜ்குமாரின் மகன்களே கொடுத்துள்ளார்கள்' என்றார்.

முடிவில்லமால் தொடர்ந்து கொண்டிருந்த இந்த சர்ச்சை (2003) இல் மீண்டும் வலுவாக உயிர்த்தெழுந்தது. இந்தமுறை தமிழக சினிமா சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் பெயர்அடிபட்டது! ராஜ்குமாரை மீட்பதற்காகப் பணம் திரட்டியதிலும் அதை வீரப்பனிடம் அனுப்பியதிலும் ரஜினிகாந் துக்குத் தொடர்பு இருப்பதாகவும் இதற்காக அவரை விசாரிக்கப் போவதாகவும் தமிழக போலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால் ராஜ்குமார் மீட்கப்படுவதில் ரஜினிகாந் மிகுந்த அக்கறையோடு இருந்ததாக தினகரின் புத்தகம் குறிப்பிடுகிறது. இதற்காக கர்நாடக முதல்வர் எஸ். எம். கிருஷ்ணாவை ரஜினி மூன்று முறை நேரில் சந்தித்துப் பேசினாராம்.

அதற்கு மேல் பணம் சேகரிப்பதில் ரஜினி உதவினாரா அல்லது அவரே ஏதும் பணம் கொடுத்து அனுப்பினாரா என்றெல்லாம் ஊகங்களும் விவாதங்களும் எழுந்துள்ளன . ஆனால் இந்த விஷயத்தில் ரஜினி மீதான குற்றச்சாட்டுகள் எவையும் இன்றுவரை நிரூபிக்கப்படவில்லை . ஆனால் ரஜினியும் அந்தக் குற்றச்சாட்டுகளை நேரடியாக மறுக்கவும் இல்லை.

சி. தினகரின் புத்தகமும் மேற்சொன்ன மற்ற சாட்சியங்களும் சொல்வதை வைத்துப் பார்த்தால் ராஜ்குமாரை விடுவிப்பதற்கு வீரப்பனுக்கு ஒரு குறிப்பிட் ட அளவு கணம் தரப்பட்டிருக்க வேண்டும் என்றுதான் நம்ப வேண்டியிருக்கிறது.

அப்படியானால் வீரப்பன் இந்தப் பணத்தை என்ன செய்தான், எப்படிப் பதுக்கினான், இதில் யாருக்கெல்லாம் பங்கு என்பவை அடுத்த கேள்விகள் .

இந்தக் கேள்விகளுக்கான நேரடியான பதில் எதுவும் நம்மிடம் இல்லை. உண்மையைச் சொல்லக் கூடிய வீரப்பனும் இப்போது உயிருடன் இல்லை. ஆகவே ஓரளவு குத்துமதிப்பாகவேனும் இதைத் தெரிந்துகொள்வதற்கு நாம் வீரப்பனின் பல்வேறு அரசியல் தொடர்புகள், கடைசிக் காலத்தில் அவனோடு இணைந்திருந்த சில புதிய நண்பர்கள் ஆகியவர்களைப் பற்றிப் பார்க்க வேண்டும். ஏனெனில் வீரப்பனால் நேரடிப் பயன் அடைந்திருக்கக் கூடியவர்கள் என்று இவர் களைத்தான் சொல்ல முடியும் .

### 5. வீரப்பர்?

வயிற்றுப் பிழைப்பிற்காக வேட்டையாடத் தொடங்கிய வீரப்பன் பிறகு பல்வேறு காரணங்களால் அதையே தனது முழுநேரத் தொழிலாக அமைத்துக் கொண்டான்.

கர்நாடகத்தில் பிறந்த வீரப்பன் தமிழ் பேசும் குடும்பத்தைச் சேர்ந்தவன். அவன் உலவிய காட்டுப்பகுதி தமிழகம், கேரளம், கர்நாடகம் ஆகிய மூன்று மாநிலங்களின் எல்லைகளைக் கொண் டிருக்கிறது.

இந்தப் பெரிய கானகத்தில் ஒரு கொடுங்கோலன் போல ஆட்சிசெய்த வீரப்பன், அங்கிருந்த இயற்கை வளங்களை அழித்து தனது வாழ்க்கையைக் கட்டமைத்துக் கொண்டான். தன்னுடைய கடத்தல் நடவடிக்கைகளுக்குத் தடையாக யார் வந்தாலும் அவர்களைச் சாய்த்துவிட்டு, தன்னு டைய வழியை அமைத்துக் கொள்ளளக் கூடியவனாக அவன் இருந்தான். *(தொடரும்)*

# மஹிந்தவின் ஒப்பந்தங்கள் போருக்கான அறை கூவலே!

-செல்வம் அடைக்கலநாதன்

(கொழும்பு)

சிங்களத் தீவிரவாதிகளுடன் மஹிந்த ராஜபக்ஷ செய்துகொண்டி ருக்கும் ஒப்பந்தங்கள் தமிழர் மீதான போருக்கான அறைகூவல் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வனுடனான சந்திப்புக்குப் பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில், அவர் இதனைத் தெரிவித்தார்.

"மன்னாரில் எதிர்வரும் 28ஆம் நாள் தேசிய எழுச்சிப் பிரகடன நிகழ்வு படையினரின் கடுமையான நெருக்குவாரங்களுக்கு மத்தியிலேதான் நடை பெறவுள்ளது. இதை முறியடித்து வெற்றிகரமாக எழுச்சி நிகழ்வு நடாத் தப்படும். இங்கு நான் வரும்போது கூட படையினர் என்னைத் தடுத்து நிறுத்தி னார்கள். மன்னார் மாவட்டத்தில் அங்குள்ள காவல்துறை பொறுப் பதிகாரி ஒருவர் அடையாள அட்டை இல்லாதவர்களை கைதுசெய்யுமாறு உத்தர விட்டுள்ளார். மன்னாரில் பாதுகாப்புப் படை மற்றும் காவல்துறையினரின் நடவடிக் கைகள் முன்னெப்போதையும் விட மோசமாக உள்ளது.

இதன் விளைவாக ஒருநாள் இரவோடு இரவாக 17 பெண்கள் கைது செய்யப்பட்டனர். எங்கள் தலையீட்டுக்குப் பின்னர்தான் அவர்கள் விடுவிக்கப் பட்டனர். இந்தத் தகவல்கள் மேலிடத்துக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் குறித்து இச்சந்திப்பில் விவாதித்தோம். ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளர்கள் இன்னும் முடிவாகவில்லை. சந்திரிகா நாடு திரும்பிய உடன் சுதந்திரக் கட்சியின் தேர்தல் அறிக்கையை வெளியிடவுள்ளார். அந்த அறிக்கையை மஹிந்த ஏற்காவிட்டால் வேறு ஒருவர் போட்டியிடக் கூடும் என்று கூறப்படுகிறது. தேர்தல் தொடர்பாக இறுதி முடிவெடுக்க இன்னும் நாட்கள் இருக்கின்றன.


இது தொடர்பாக தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனுடன் மற்றொரு சுற்றுப் பேச்சுவார்த்தை நடத்தப்பட உள்ளது.

அந்த சந்திப்புக்குப் பிறகு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடுமா, யாரை ஆதரிக்கும் என்பது தமிழ் மக்களுக்குத் தெரிவிக்கப்படும். அடுத்த சந்திப்புக்கான திகதி முடிவு செய்யப்படவில்லை.

ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமயவுடன் மஹிந்த ராஜபக்ஷ ஒப்பந்தம் செய் துளளதன் மூலம் தமிழ்மக்கள் மீதான போருக்கான அறைகூவலினை விடுத்துள்ளது. பாராளுமன்றத்தில் இதுகுறித்து எங்கள் கருத்தினைத் தெரிவிப்போம். என்னுடைய தனிப்பட்ட கருத்து மஹிந்த ராஜபக்ஷ போன்றவர்கள் ஆட்சிக்கு வந்தால் தமிழர்கள் தங்களது இலட்சியத்தை வென் றெடுத்து விடுவார்கள். இருந்தாலும் சர்வதேச சமூகத்துக்கு உணர்த்தப்பட வேண்டி யவை இன்னும் நிறைய இருக்கின்றன. பல தளபதிகள், போராளிகள், பொதுமக்களை இழந்தபோதும் தமிழீழ விடுதலைப்புலிகள் பொறுமை காத்து வருகின்றனர். மஹிந்த போன்ற வர்கள் ஆட்சிக்கு வரும்போது ஒரு கொடி, ஒரு தலைவன் என்ற கோட்பாட்டின் கீழ் தமிழர்கள் அணிதிரண்டு நாட்களை நீடிக்காமல் ஒரு இறுதத் தீர்வாக ஈழ தேசத்தை அடையமுடியும்" எனத் தெரிவித்தார். (த-4)

# பட்டதாரி பயிலுநர்கள் ம. உ. ஆ. குழுவில் நேற்று தனித்தனியாக மகஜர்கள் கையளிப்பு







அண்மையில் வழங்கப்பட்ட நியமனத்தில் தவறவிடப்பட்ட பட்டதாரிப் பயிலுநர்கள் அனைவரும் நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தின் முன்னால் ஒன்று திரண்டு தமக்கு நியமனத் தைப் பெற்றுத் தரும்படி கோரி தனித்தனியே முறைப்பாடு செய்துள்ளார் கள்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் றோகித பிரியதர்சன இவ்வாறு பட்டதாரிப் பயிலுநர்களால் தனித்தனியே வழங்கப்பட்ட 300ற்கும் மேற்பட்ட மகஜரை ஏற்றுக்கொணடார்.

அத்துடன் இந்நியமனம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுப்பதாக அவர் பட்டதாரிப் பயிலுநர்களுக்கு தெரிவித்தார். நேற்று முன்தினம் திரு கோணமலை மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங் கத்தை தமிழர் ஆசிரியர் சங்கத்தினர் சந்தித்துக் கலந்துரையாடிய போது வடக்கு- கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் நியமனத் தில் தவறவிடப்பட்ட பட்டதாரிப் பயிலுநர்கள் அனைவருக்கும் ஒரு மாத காலப்பகுதியில் நிரந்தர ஆசிரிய நியமனம் வழங்கப்படும் என உறுதிய ளிக்கப்பட்டது.

இதன் பிற்பாடு யாழ். கல்வி வலயத்திற்கு முன்பாக தொடர்ந்து நடத் தப்பட்டு வந்த மறியல் போராட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. இந் நிலை யில் நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இவர்களால் தனித் தனியே மகஜர் கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-19)

# பலகலை வித்தகர்

எதையும் கூர்ந்து கவனிக்கும் கண்கள். வார்த்தையின் பெருமதியை உணர்ந்து ஒவ்வொன்றாக வெளிப்படுத்தும் உரையாடல் இத்தனை திருக்கோலத்துடன் எம்மத்தியில் வாழ்ந்துவரும் ஓர் அறிஞன், ஒரு சிந்தனாவதி மாபெரும் கலைஞன் கலாநிதி காரை செ.சுந்தரம்பிள்ளை என்பதை தமிழ் கூறும் நல்லுலகம் நன்கறியும்.

நவீன தமிழிலக்கியத்தில் காரையின் பேனா தடம் பதிக்காத துறை எதுவுமேயில்லை எனலாம். காரை என்ன எழுதினார் எனக் கணக்கிடுவதிலும் பார்க்க எதனை எழுத வில்லை எனக் கணக்கிடுவது இலகுவாக இருக்கும். நாடக ஆசிரியராக-நடிகராக-நடுவராக-பேச்சாளராக-ஆய்வாளராக கவிஞராக-கட்டுரையாளராக-பாடநூல் எழுத்தாளராகப் பலதுறைகளிலும் அகலமாயும் ஆழமாயும் கால்களை ஊன்றியுள்ளார். தரமான நாடகங்களை மேடையேற்றியதுமன்றித் தானே பிரதான நடிகராக நடித்தும் நாடகத் துறைக்கு மெருகூட்டியவர்.

நாடகங்களை எழுதி நெறிப்படுத்தி தயாரித்து அவற்றில் நடிக்கும் கலைஞர்கள் மிகக் குறைவு. இக்குறை போக்கிய காரை தன்னுடைய ஆங்கிலப் புலமையின் துணை கொண்டு நாடகமேடை உத்திகளைக் கற்றறிந்து ஈழத்து தமிழ் நாடகங்களை வளர்ந்துவிட்டமேலைத்தேசமேடை நாடக உயர் நிலைக்கு உயர்த்த வேண்டும் என்ற உயர்ந்த எண்ணம் உடையவர்.

இவர் முதல் ஆடிய நாட்டுக் கூத்து இரணிய சம்ஹாரம். (பாத்திரம் பிரகலாதன்) முதலில் நடித்த சமூக நாடகம் பராசக்தி-(பாத்திரம் கல்யாணி) மேடையேற்றிய முக்கிய நாடகங்கள் சமூகநாடகங்கள் தரகர் தம்பர்-தம்பிபடிக்கிறான்-வாழ்வும் தாழ்வும்-சினிமா மோகம்-சித்திரமே சித்திரமே-இதிகாசபுராண நாடகங்கள் பக்த நந்தனார், கர்ணன், சகுந்தலை, தமயந்தி, வில்லொடிந்த விதுரன், சிற்பியின் காதல், ஆட்ட நாட்டுக் கூத்து நாடகங்கள், பாஞ்சாலி சபதம்-மூவிரா சாக்கள்-மூத்தர் மாணிக்கமா? காமன் கூத்து சிறுவர் நாடகங்கள் மூத்தோர் சொல்வார்த்தை அமுதம். (1998) பாவம் நரியார் (1998).

நாடறிந்த நல்ல கவிஞரான காரையின் பிரசுரமான முதல் கவிதை புகைவண்டி வெளிவந்த பத்திரிகை-பூஞ்சோலை-காலப் போக்கில் ஈழத்து பத்திரிகைகள் அனைத்திலும கவிதைகள் வெளிவந்தன. இவர் வெளியிட்ட கவிதை நூல்கள் தேனாறு (1968) சங்கிலியம் (1970) தவம் (1971) உறவும் துறவும் (1985) பாதை மாறிய போது (1968) காவேரி (1993) போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இவரின் ஆய்வுநூல்களை "ஈழத்து இசை நாடக வரலாறு (1990)" இந்து நாகரிகத்திற் கலை 1994), "நடிகமணி வி.வி.வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும் (1996)" சிங்களப் பாரம்பரிய அரங்கம் (1997)"

பதிப்பித் நூல்கள் நாடகதீபம் (1989) கல்வி உளவியல் (1975)

இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசுபெற்ற நூல்கள் தேனாறு (1968) சங்கிலியம் (1970) ஈழத்து இசைநாடக வரலாறு (1990) நடிகமணி வி.வி.வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும் (1996) இந்து நாகரிகத்திற்கலை (1994).

அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற போட்டிகளில் தங்கப் பதக்கம் முதற்பரிசாக பெற்றமை பதுளை பாரதி கல்லூரி நடத்திய கவிதைப் போட்டி (1968), யாழ்.மாநரசபை நடத்திய போட்டி (1969) யாழ்.மாநகரசபைக் குரிய மன்றக்கீதம் எழுதும் போட்டியில் முதற்பரிசும் விருதும் (1982) ஈழநாடு தினசரிப்பத்திரிகை நடத்திய அகில இலங்கை காவியப்போட்டி 1970 இல் சங்கிலியம் முதற் பரிசு பெற்றது.

இவர் கலாநிதிப்பட்டத்திற்குச் சமா்ப்பித்த ஆய்வு மிகச் சிறந்த ஆய்வு ஏடு எனப்பரீட்சகர்களால் பாராட்டப்பட்டது. இதற்காக யாழ். பல்கலைக்கழகம் தம்பிமுத்து கனகசுந்தரம்பிள்ளை நினைவுப் பரிசை வழங்கியது.

காரையின் பேச்சுக்கலைப் பெருமைகளும் கருத்தில் கொள்ளத்தக்கன. பேச்சை ஆளுதல் என்பது சிரமமான காரியம். நாட்டை ஆளுவதாக நாவை ஆளுவதா இலகுவானது என்ற கேள்வி எழுந்தால் நாட்டை ஆளுவது சுலபமாகத் தெரியும். நாடாளப்பக்கத்துணைகள் பல இருக்கும். நாவை ஆளுவதற்கு எவருடைய துணையும் கிடைக்காது. எல்லாவற்றையும் தானே கவனித்து நாவாட்சி செலுத்த வேண்டும்.

காரையின் பேச்சு வண்மையை ஆய்வு செய்தால் முதலாவது இவர் ஒரு சமய இலக்கிய கலாரசனைப் பேச்சாளர், இரண்டாவது ஒருங்கமைந்த சமூக மேம்பாட்டுச் சிந்தனைப் பேச்சாளர், மூன்றாவது பட்டிமண்டப வழக்காடு மன்றப் பேச்சாளர் எனக் காணலாம். அறிவு பூர்வமாகவும் நியாயபூர்வமாகவும் சரியான தீர்வு மார்க்கங்களைக்காட்டுவார். எந்த விடயத்திலும் இவருடைய பன்னூல் பயிற்சியை அறியமுடியும். இத்தனைக்கும் அவருடைய ஆழ்ந்தகன்ற கல்வியறிவே காரணமாகும்.

சிறந்த பண்பாளனும் இயற்கையிலேயே சாந்த குணமுடையவரும் எல்லோருடனும் இனிமையாகப் பேசிப்பழகும் சுபாவம் உடையவரும் அமைதியான எளிமையான தோற்றங் கொண்டவராகவும் காட்சிக்கு எளியவராகவும் கருத்துக்கினியவராகவும் இன்றும் உடல் உள நலத்தோடு உறவாடிக்கொண் டிருக்கும் காரை பன்முக ஆளுமை கொண்டவர்.

இவ்வளவும் கூறியபிறகும் ஈழத்துத்

**நயினை கி.கிருபானந்தா**

தமிழ் இலக்கிய உலகிற்கு காரையின் பங்கு எப்படிப்பட்டது? தமிழ் அறிஞர் திருக்கூட்டத்திலே அவர் எந்த வரிசையில் எந்த இடத்தில் நிற்கின்றார், என்ற வினா எழவே செய்கிறது.

# காரை செ.சுந்தரம்பிள்ளை

"வீழ்நாள்படா அமைநன் காற்றின் அ∴தொருவன்
வாழ்நாள் வழியடைக்கும் கல்"

என்றார் வள்ளுவர்.

அவரின் பொன் மொழிக்கேற்பத் தமது வாழ்நாள்களை வீழ் நாள்களாக்காது முதுமையிலும் அயராது பணியாற்றிவரும் காரையின் வாழ்நாள் முடிவின்றி நீண்டு கொண்டேயிருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

# பொருளாதார அபிவிருத்தி குறித்து விசேட கவனம் செலுத்தவேண்டும்

(கொழும்பு)

இம்முறை ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் பணவீக்கத்தினைக் கடடுப்படுத்துவது,வருமான நெருக்கடிகளைக் குறைப்பது மற்றும் முதலீட்டினை ஊக்குவிப்பது போன்ற துறைகள் குறித்து விசேடகவனம் செலுத்த வேண்டும் என டி.சி.சி.அபிவிருத்தி வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் எல்.ஜி.பெரேரா தெரிவித்தார்.

மிகச் சிறந்த பொருளாதார அபிவிருத்தியினை நோக்கி இலங்கை செல்ல வேண்டும் என்பதையே நாம் அனைவரும் எதிர்பார்க்கின்றோம்.

ஒவ்வொரு வேட்பாளரும் அதனைச் செய்ய வேண்டும். எமது வருமானத்தின் ஏற்றத்தாழ்வுகள் எமக்குத் தெரியும். இச்சந்தர்ப்பத்தில் பொருளாதார அபிவிருத்தியினை மாத்திரம் ஏற்படுத்திக் கொண்டால் போதாது வருமான நெருக்கடிகளுக்கு நாம் தீர்வுகாண்பது கடினம்.

அரசியல் கட்சிகளில் மாற்றம் ஏற்படலாம் தலைவர்கள் மாறலாம் குறைந்த பட்சம் 10 வருடங்கள் ஏனும் நிலைக்கககூடிய பொருளாதாரக் கொள்கையொன்றே எமக்குத்தேவை. இதற்காக சமாதானத்தின் நிலைப்பாடு அவசியம் தேவை எனத் தெரிவித்தார்.

எந்த அரசியல் கட்சி ஆட்சிக்கு வந்தாலும், எந்த தலைமைத்துவத்தின் கீழேனும் குறைந்த பட்சம் அமுலில் இருக்கும் சிறந்த பொருளாதாரக் கொள்கையொன்றே நாட்டுக்குத் தேவையாகவுள்ளது என சம்பத் வங்கியின் விற்பனை மற்றும் வர்த்தக அமைப்பின் உதவிப் பொது முகாமையாளர் கபில கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

நிதி இடைத்தரகர்களாகவே வங்கிகள் செயற்படுகின்றன. இந்த செயற்பாட்டினை மிகச் சிறப்பாக மேற்கொள்ளும் சூழலையே அனைவரும் எதிர்பார்ப்பர்.

எந்த வேட்பாளரிடமிருந்தும் நாம் அதனையே எதிர்பார்ப்போம். முக்கியமாக சேமிப்புத் தொடர்பான சூழல் சிறப்பாக இருக்க வேண்டும். மற்றையது முதலீட்டு நிலைமையும் சிறப்பாக இருக்க வேண்டும்.

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதை அரசாங்கம் கொள்கையாக நடைமுறைப் படுத்த வேண்டும் என தாம் எதிர்பார்ப்பதாக காக கபில கருணாரத்ன தெரிவித்தார்.

(த-4)

# தொண்டர் ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் மீள் ஆரம்பம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண அரசாங்கப் பாடசாலைகளில் தொண்டர் அடிப்படையில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு நிரந்தர ஆசிரியர் நியமனங்களை வழங்குவதற்கான நேர்முகப்பரீட்சைகள் மீண்டும் ஆரம்பிக்கப் பட்டுள்ளது என மாகாண கல்வியமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் அறிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாண வலயக்கல்வி அலுவலகங்களில் தொண்டர் ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் ஏற்கனவே நடைபெற்று வந்தபோதிலும் பின்னர் திடீரென இடைநிறுத்தி வைக்கப்பட்டது.

தற்போது நேர்முகப்பரீட்சைகளை மீண்டும ஆரம்பிக்குமாறு வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் ரிசோன் பெர்னாண்டோ பணிப்புரை விடுத்துள்ளார்.

ஏற்கனவே மாகாணக்கல்வித் திணைக்களத்தினால் வலயக்கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள பட்டியலிலுள்ள தொண்டர் ஆசிரியர்கள் மட்டுமல்ல படடியலில் இடம்பெறாத முறைப்பாடு செய்த தொண்டர் ஆசிரியர் அனைவரையும் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு உத்தரவிடப் பட்டுள்ளது.

தொண்டராசிரியர்கள் க.பொ.த.உயர் தரப் பரீட்சையில் சித்தியடைந்து பலகலைக் கழக அனுமதிக்கான தகுதியை பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையும் தற்போது நீக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் 2004ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் தொண்டர் அடிப்படையில் கடமையாற்றிய 18 வயதுக்கும் 45வயதுக்கும் இடைப்பட்ட சகல ஆசிரியர்களும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படவுள்ளதாக மாகாண கல்வி யமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (த-9)

# சதுரங்க தெரிவுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/இந்து ஆரம்ப பாடசாலையில் சதுரங்கத் தெரிவுப்போட்டி இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. இவ்வாண்டு இலங்கையில் நடைபெறவிருக்கும் ஆசிய இளைஞருக்கான சதுரங்க சம்பியன் போட்டியில் கலந்துகொள்ளும் போட்டியாளர்களை தெரிவுசெய்வதற்காக தேசிய மட்டத்தில் நடைபெறவுள்ள போட்டியில் கலந்துகொள்ளும் போட்டியாளர்களை தெரிவுசெய்ய இலங்கையின் 09 மாகாணங்களிலும் நடைபெறும் தெரிவுப் போட்டியாக இது அமையும்.

இதில் 2005.01.01 திகதிப்படி 9,11,13,15, 20 வயதுக்குடபட்ட ஆண், பெண் பிரிவுகளில் போட்டியாளர்கள் தெரிந்து எடுக்கப்படுவார்கள். விண்ணப்பக்கட்டணம் ரூபா 150 ஒவ்வொரு பிரிவிலும் 1ஆம், 2ஆம் 3ஆம் இடத்தை பெறும் வீரர்களுக்கு முறையே தங்கம, வெள்ளி, வெண்கலப் பதக்கங்களும் இலங்கைச் சதுரங்கச் சம்மேளனத்தின் சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப்படும்.

போட்டியாளர்கள் வயதை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் நேரடியாக யா/இந்து ஆரம்ப பாடசாலைக்கு இன்று காலை 9.00 மணிக்கு முன்னர் சமுகமளித்து விண்ணப் பக்கட்டணத்தை செலுத்தி போட்டியில் பங்கு கொள்ளலாம் என யாழ்ப்பாணம் சதுரங்க சம்மேளனம் அறிவித்துள்ளது. (த)

# தமிழீழப் பிரகடன நடவடிக்கையில் புலிகள் இராணுவப் புலனாய்வுத்துறை அரசுக்கு அறிக்கை

தமிழீழத் தனியரசுப் பிரகடனத்துக்கான பணிகளை தமிழீழ விடுதலைப்புலிகள் மேற்கொண்டிருப்பதாக அரசுக்கு அனுப்பிய அறிக்கையில் புலனாய்வுத்துறை அச்சம் தெரிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் தன்னிச்சையாகவே தமிழீழத் தனியரசு பிரகடனததை வெளியிடக்கூடும். இது தொடர்பாக சர்வதேச சமூகத்தின் ஆதரவைப் பெறும் நடவடிக்கைகளை அவர்கள் தற்போது மேற்கொண்டுள்ளனர்.

வடக்கு-கிழக்கு வாழ் தமிழர்களின் மீளமைப்புக்கான அரசாங்கத்தின் உதவிகள் எதுவும் சென்றடையாத நிலையில் இதை சர்வதேச சமூகத்தின் பார்வைக்கு விடுதலைப் புலிகள் கொண்டு சென்றுள்ளனர்.

ஆழிப்பேரலை மீளமைப்புக்கான பொதுக் கட்டமைப்பு உயர் நீதிமன்றத்தால் முடக்கி வைக்கப்பட்டுள்ளது. இதனால் தமிழர் தாயகப் பகுதிக்கு சர்வதேச நிதி உதவியை நேரடியாக வழங்குமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் விரைவில் கோரிக்கை விடுக்கக் கூடும்.

இந்தத் தகவல்கள் குறித்து தெரிவித்த புலனாய்வுத்துறை அதிகாரி ஒருவர் ஐக்கிய நாடுகள் சபையை இந்தப் பிரச்சினையில் தலையிடுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளது சரியானது அலல. இந்த நடவடிக்கையானது தமிழீழ விடுதலைப் புலிகளின் தனியரகப் பிரகடனத்துக்குத்தான் கண்டிப்பாக உதவக்கூடும்.

காஷ்மீர்ப் பிரச்சினையில் ஐக்கிய நாடுகள் சபையின் தலையீட்டை இந்தியா விரும்பாதிருப்பது போல் அரசும் இருந்திருக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (அ-04)

## வீடுகள் புனரமைப்பு

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் இதுவரை சுனாமியால் அழிந்துபோன வீடுகளில் 450 வீடுகளின் புனரமைப்பு வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகிறது.

வடமராட்சி வடக்கு பிரதேச சபைப்பிரிவில் கியூமெடிககா, போருட், யு.என்.கபிற்ரெட் கியூடெக், கரித்தாஸ் ,கெயர் மற்றும் யு.என். எச். சி.ஆர்.போன்ற நிறுவனங்கள் 879நிரந்தர வீடு களை அமைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற-35)

# விண்ணப்பம் கோரல்

# அதிபர் சேவை தரம் 2

இலங்கை அதிபர் சேவையின் 2ஆம் வகுப்பில் IIஆம் தரத்திற்கு சேர்த்துக் கொள்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சைக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரி பயிற்சிக்குப் பின்னர் 10 வருடங்களை விடக் குறையாத திருப்திகரமான சேவைக்காலத்தைக்கொண்ட பயிற்சி பெற்ற ஆசிரியர்/ஆசிரியை அல்லது பட்டதாரி ஆசிரியர்/ஆசிரியையாக 5 வருடத்தை விடக் குறையாத திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்ட பட்டதாரி ஆசிரியராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் 2005.09.30ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சை திணைக்களம், பெலவத்தை, பத்திர முல்ல என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

(அ-19)

## சிரமதானப் பணி

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு யாழ். மாநகரசபையினர் நல்லூர் முருகன சனசமூக நிலையத்தினருடன் இணைந்து நேற்று முன் தினம் முருகன் சனசமூக நிலையத்திற்கு அண்டிய பகுதிகளில் சிரமதானப் பணிகளை மேற்கொண்டார்கள்.

இப் பகுதிகளில் வீதிகளில் கொட்டப்பட்டிருந்த குப்பைகளை அகற்றல், நுளம்பு பெருகுவதற்கு சாதகமாக இருந்த இடங்களை இனங்கண்டு அழித்தல், பாவனையில்லாது சேதமடைந்த வீடுகள், பொது இடங்களில் சிரமதானப் பணிகளை மேற்கொள்ளல் போன்ற வேலைத்திட்டங்களை மேற்கொண்டார்கள். (அ-19)


# அன்புள்ள அம்மா

6

தலை கீழிறங்காமல் இருக்கும் பட்சத்தில் சுகப்பிரசவம் சிலவேளைகளில் நடக்க முடியாமல் போகலாம்.

**தலை இறங்காமைக்கு காரணம்**

1. திரும்பாத தலை 2. பெரிய தலை



3. சிறிய இடுப்பு
4. நஞ்சுக்கொடி (சூல்வித்தகம்) Placenta) அடிப்பகுதியில் இருத்தல்.

36 கிழமைக்கு அண்மையாக கருப்பைக் கழுத்திலிருந்து வெள்ளை நிற சளி போன்ற பதார்த்தம் வெளிவரலாம். இது Show எனப்படும்.

இறுதி 3 மாதங்களில் கருப்பைச்சுவர் சில வேளைகளில் சுருங்கி விரியலாம். இது உண்மையான பிரசவ வேதனை அல்ல. இதை Braxton Hicks என்று சொல்வார்கள். கருப்பை. சுருங்கிப் பழகுவதாகவும் சிலா் கூறுவார்கள்.

இதன்போது ஏற்படும் வலி மெல்லியதாகவும், குறுகிய காலத்திற்கு நீடிப்பதாகவும் இருக்கும் பெரும்பாலும் 3-4 மணித்தியாலங்களில் வலி நின்று விடும்.

தலை கீழ் இறங்கத் தொடங்கியதும் (இடுப்புக்குழிக்குள்) உங்கள் உடல் சற்று இலேசாக இருக்கும். ஆனால் சிலருக்கு அடிவயிற்றில் மெல்லிய நோ ஏற்படும். சிறுநீா்ப்பை மீது குழந்தையின் தலை அழுத்துவதால் அடிக்கடி சிறுநீா் வருவது போல் தோன்றும் சிலருக்கு சிறுநீா் கட்டுப்பாடு இல்லாமல் கூட போகக்கூடும்.

**என் குழந்தைக்கு பிரச்சினை ஏதும் இல்லையே?**

ஒவ்வொரு தாயினதும் மனதில் இக்கேள்வி எழத்தான் செய்யும். பிறக்கும் குழந்தைகளில் 97 சதவீதமானவை குறைபாடுகள் அற்ற சுகதேகிகள். ஏனைய 3 வீதமான குழந்தைகளில் குறைபாடுகள் இருக்கக்கூடும். எனவே தாய்மார் இதையிட்டு பெரிதும் பயப்படத் தேவையில்லை.

ஆயினும் இவ்வாறான பிரச்சினைகள் பின்வரும் சந்தா்ப்பங்களில் அதிகளவில் காணப்படும்.

1) தாயின் வயது 35 இலும் கூட
2) குடும்பத்தில் குறைபாடுடைய குழந்தைகள்

**குறைபாடுகளை கண்டறிய முடியுமா?**

கிட்டத்தட்ட 50 வீதமான குறைபாடுகள் ஸ்கான் மூலமும் சில குறைபாடுகள் தாயின் இரத்தப் பரிசோதனை மூலமும் கண்டுபிடிக்க முடியும்.

ஆனால் குறைபாடுள்ள குழந்தையை முன்னரே கண்டுபிடித்தாலும் கருச்சிதைவு செய்வது இலங்கையின் சட்டத்திற்கு விரோதமானதாகும்.

**குறைபாடுள்ள குழந்தைகள் பிறப்பதை குறைப்பது எப்படி?**

பெரும்பாலான சந்தா்ப்பங்களில் குறைபாடுகள் தவிர்க்க முடியாமலே ஏற்படுகின்றன. எனினும் கீழ்வரும் சந்தா்ப்பங்களைத் தவிர்ப்பது நன்று.

1. நெருங்கிய உறவினா்களை மணமுடித்தல்.
3. தாய் அல்லது தகப்பன் புகைப்பிடிப்பது
4. மது பாவனை
5. கட்டுப்பாடற்ற சலரோகம்
6. சில மருந்துகளின் பாவ்னை
7. X கதிர்ப்பு

போலிக்கமிலம் என்னும் உயிர்ச்சத்து குறைபாடுள்ள குழந்தைகள் பிறப்பதை குறைப்பதாக அண்மைய ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

**எனது வயிறு சின்னதாக உள்ளது?**

இது பல தாய்மாரின் மனக்குறை. அநேகமாக உறவினா். அல்லது அயலவா் ஒருவரே இதை 'கண்டுபிடித்து' தாயின் மனத்தில் பெரும் சஞ்சலத்தை உண்டாக்குவா். பெரும்பாலான சந்தா்ப்பங்களில் இது தாயின் அல்லது உறவினரது வெறும் கற்பனையாகும். ஒருவரது வெளி வயிற்றின் அளவை மட்டும் வைத்து குழந்தையின் வளா்ச்சி போதாது என கூறமுடியாது. முதல் கா்ப்பத்தில் வயிற்றுத் தசைகள் இறுக்கமாக இருப்பதாலும் சில தாய்மாரின் இடுப்புக்குழி பெரிதாக இருப்பதாலும் வயிறு சிறிதாகத் தோற்றும். எனவே வைத்தியரின் பரிசோதனைகள் மூலமே உங்கள் குழந்தை பெரிதா அல்லது சிறிதா என அறியலாம்.

**சிறிய வயிற்றிற்குரிய காரணங்கள்**

1. தாய், தகப்பனின் சிறிய தோற்றம் (பரம்பரை)
2. பிழையான திகதி
3. வளா்ச்சி குறைவான குழந்தை

**பெரிய வயிற்றிற்குரிய காரணங்கள்**

1. பெரிய குழந்தை
2. இரட்டைக் குழந்தைகள்
3. தாயிற்கு சலரோக நோய்
4 தாயிற்கு குருதி அமுக்கம், வீக்கம். இவ்வாறான சந்தா்ப்பங்களில் நீங்கள் வைத்தியரை நாடவேண்டும்.

**குழந்தை துடிப்பது குறைவு?**

தாய்மாா்கள் அடிக்கடி செய்யும் முறைப்பாடு இது. பெரும்பாலும் சில மணித்தியாலங்களிற்கே இது நீடிக்கும். அநேகமாக நீங்கள் வேறு கவனங்களில் இருப்பதால் குழந்தை துடிப்பதை நீங்கள் அவதானிக்காமல் இருந்திருக்கக்கூடும். ஆரோக்கியமாக உள்ள குழந்தைகள் பெரும்பாலும் மணித்தியாலமொன்றிற்கு 2-3 தரம் வரை துடிக்கும். எனினும் குழந்தை வளர வளர அது தூங்கும் நேரமும் கூடும். எனவே தற்காலிகமாக துடிக்கும் நேர இடைவெளிகள் அதிகரிக்கலாம்.

36ஆம் கிழமை (9 மாதம்) யின் பின்னா், குழந்தை இடுப்புக் குழிக்குள் இறங்கத் தொடங்குவதால் குழந்தை அசைந்து திரிய பெருமளவு இடம் கிடைப்பதில்லை. எனவே துடிப்புகளும் குறைவாகவே உணரப்படும்.

குழந்தை தொடா்ந்து துடிக்காமல் இருந்தால் (4 மணித்தியாலம்) வைத்தியரை அணுகவும். அவா் குழந்தையின் இருதய துடிப்பைச் சோதிப்பதோடு வேறும் பல பரிசோதனைகளை மேற்கொள்வா்.

## உங்கள் குழந்தை

**முதல் 4 மாதம் (4ஆம் கிழமை)**

5mm அளவு (அப்பிள் கொட்டை அளவு)
நரம்புகள், மூளை என்பன தோன்றும்
இருதயம் துடிக்க ஆரம்பிக்கும் (5ஆம் கிழமை)

**4ஆம் மாதம் (16ஆம் கிழமை)**

பெருவிரலளவு உருவம், பெரிய தலை, குத்துக்கரணங்கள் அடிக்கும் கை, கால்களை நீட்டி மடக்கும். நீங்கள் குளிக்கும் போது உசாராகும். விரல்கள் தோன்றும்.

தன்னைச் சுற்றியுள்ள நீரைக்குடிக்க ஆரம்பிக்கும், விரலையும் சூப்பும், கொட்டாவி விடும் புருவங்களை உயா்த்தும், நிறை கிட்டத்தட்ட 150gm

குழந்தை கருப்பைக்குள் Amniotic Sac எனப்படும் பன்னீா்க்குடத்திற்குள் மிதந்தவண்ணம் இருக்கும். குழந்தை, தொப்புள் கொடி மூலம், சூல்வித்தகமூடாக (நஞ்சுக்கொடி) தாயின் கருப்பையுடன் இணைக்கப்பட்டிருக்கும்.

**5ஆம் மாதம் (20ஆம் கிழமை)**

குழந்தையின் வளா்ச்சி வேகம் அதிகரிக்கும். உள்ளுறுப்புகள் வள்ா்ந்து முதிா்வடையும்.

கருப்பையுள் போதியளவு நீா் இருப்பதால் இலகுவாக அசைந்து திரியும், இந்த அசைவுகளை தாயால் உணர முடியும். மெல்லிய தோல் படையும் கண்மயிா்களும் உருவாகும். இப்பொழுது நிறை கிட்டத்தட்ட 300gm.

**6ஆம் மாதம் (24ஆம் கிழமை)**

உடலின் வளா்ச்சி தொடா்கிறது. உறுப்புகள் மேலும் முதிா்வடையும். குழந்தையின் தோல் மென்சிவப்பாகவும், சுருங்கியும் காணப்படும்.

கண்கள் திறந்து மூடும் தாயின் வயிற்றிற்கூடாக தெரியும் வெளிச்சத்தை குழந்தை பாா்க்க வல்லது.

**7ஆம் மாதம் (28ஆம் கிழமை)**

உடல் உறுப்புகள் உறுதியடையும் எலும்புகள் பலமாகும். குழந்தை காலையும் கையையும் நீட்டி உடற்பயிற்சி செய்யும். விக்கல் எடுக்கும் அழவும் கூடும். இப்பொழுது சுவை தெரியும். வெளிச்சத்திற்கும் ஒலிக்கும் தூண்டலை காட்டும் உடலில் கொழுப்பு சேர தொடங்கும். இப்பொழுது நிறை கிட்டத்தட்ட $1^1/_4$ கிலோ

**8ஆம் மாதம் (32ஆம் கிழமை)**


குழந்தை நன்கு பெருத்துவிட்டதால் அதிகம் அசைய இடமில்லை. குழந்தையின் உதைகள் வலிக்கவும் செய்யும் இன்னும் குழந்தை யின் தலை மிருதுவான தாகவும் நசியக்கூடிய தாகவுமிருக்கும். இது குழந்தை பிரசவிக்கப்படும் பொழுது தலை இலகுவாக வெளியேவர உதவி புரியும்.

**9ஆம் மாதம் (36ஆம் கிழமை)**

குழந்தை முதிா்வடைந்திருக்கும். அதாவது வெளியே வந்தால் பிரச்சினை ஏதுமின்றி உயிா்வாழும் தகைமைபெற்றுவிட்டது. குழந்தை நன்கு நித்திரை கொள்ளும் கனவுகளும் காணும். வெளியே வரும் நாளை ஆவலுடன் எதிா்பாா்த்திருக்கும்.

## கர்ப்பகாலத்தில் ஏற்படும் முக்கிய பிரச்சினைகள்

பெரும்பாலான கா்ப்பங்களின் போது சிக்கல்



கள் ஏற்படுவது குறைவு, எனினும் சில தாய்மாருக்கு பிரச்சினைகள் எழக்கூடும் அதிகளவில் ஏற்படும் சில சிக்கலான பிரசவங்கள் பற்றி அறிந்திருத்தல் நல்லது.

**பிரசவகால குருதி அமுக்கம் (Pregnancy induced Hypertension)**

இது பெரும்பாலும் 28கிழமைகளின் (7ஆம் மாதம்) பின்னா் ஏற்படுகின்றது. இதன்போது

**வைத்திய கலாநிதி சி.நவநீதன்**

குருதி அழுக்கம் 140/90லும் அதிகரிப்பதோடு கால் வீக்கம் சிறுநீரில் அல்பியுமின் கழிதல் என்பன நிகழும்.

இதன் ஆரம்ப நிலையில் சிக்கல்கள் ஏற்படுவது குறைவாயினும் நோயின் கடுமை அதிகரிக்கும் பொழுது பின்வரும் பிரச்சினைகள் எழலாம்.

1. குழந்தையின் வளா்ச்சியில் பாதிப்பு
2. சிறுநீா் உற்பத்தி குறைதல்
3. குருதிப் போக்கு
4 வலிப்பு
5. ஈரலில் பாதிப்பு

**தடுக்க முடியுமா?**

இது முற்றாக தடுக்க முடியாததொரு நோய் ஆயினும், தகுந்த மருத்துவ கண்காணிப்பின் மூலம் இந்நோயின் காரணமாக எழும் சிக்கல்களை குறைக்கலாம். கிரமமாக குருதி அமுக்கத்ன சோதிப்பதன் மூலம் இந்நோயை ஆரம்ப ப[illegible]லேயே கண்டுபிடித்து சிகிச்சை பெறலாம் நடபுனத்துவ ஆலோசனை பெறப்படுதல் அவசியம்.

இந்நோயுடையவா்கள் உப்பின் பாவனையைக் கடடுப்படுத்துவது நனகெனக் கருதப்படுகிறது. குருதி அமுக்கம் கூடியவா்கள் ஓய்வெடுத்தல் அவசியமாகும். தேவையேற்படின் குருதி அமுக்கத்தைக் குறைக்க மருந்துகள் பாவிக்க வேண்டி வரலாம். (தொடரும்)

# மக்களின் ஒத்துழைப்பு இருந்தால்தான் சுற்றாடலை சுத்தமாக்க முடியும்

(சுதுமலை)

நல்லூா் பிரதேச செயலா் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்கள் கழிவுகளை கண்டபடி தெருவில், ஒழுங்கையில் எறிவதால் பல்வேறு சுற்றாடல் பிரச்சினைகள் ஏற்பட்டு வருவதாக நல்லூா் பிரதேச செயலா் திருமதி சு,தெய்வேந்திரம் தெரிவித்துள்ளா்.

கடந்த திங்கட்கிழமை நல்லூா் பிரதேச செயலா் பிரிவில் நடைபெற்ற ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் கலந்துகொண்ட பிரதேச செயலா் மேலும் தெரிவித்ததாவது.

நந்தாவில் குளவாய்க்கால் விவசாய திணைக்களம் சம்மேளனங்களுடன் இணைந்து பல்வேறு கழிவுகள் சிரமத்தின் மத்தியில் துப்புரவு செய்யப்பட்டு, மழை நீா் ஓடுமளவிற்கு செய்யப்பட்டது.

ஆனால் தற்போது பொறுப்பற்ற விதத்தில் மக்கள் கழிவுகளை கொட்ட ஆரம்பித்துள்ளனா்.

எனவே மக்க ளின் பூரண ஒத்துழைப்பு இருந்தால் மட்டுமே இவ்வாறான இடங்களை சுத்தமாக வைத் திருக்க முடியும்.

அத்துடன் கொக்குவில் பகுதிகளிலும், பல இடங்களிலும் பொது மக்கள் தமது வீட்டுக்கழிவுகளை பொறுப்பற்ற விதத்தில் வீதிகளில் கொட்டுவதை அவதானித்துள்ளதாகவும் பிரதேச செயலா் தெரிவித்தாா்.

இக் கூட்டத்தில் கருத்துரை வழங்கிய நல்லூா் பிரதேசசபையின் செயலாளா் பொ.வைரமுத்து தெரிவிக்கும் போது,

இவ்வாரம் நடைபெறும் உள்ளூராட்சி வாரத்தில் இக் கழிவுகளை, மக்கள் பங்களிப்புடன் கூடிய செயன்முறையில் அகற்றுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அத்துடன், வீதிகள், சந்தைகள், பொது இடங்கள் என்பனவும் சிரமதானங்கள் மூலம் துப்பரவு செய்யப்படவுள்ளதாகவும் தெரிவித்தாா்.

மேலும் மழைகாலம் விரைவில் ஆரம்பிக்கவுள்ளதால் கழிவுகள் உரிய முறையில் அகற்றாது விட்டால், நுளம்பின் உற்பத்தி அதிகரித்து நுளம்பினால் பரவும் நோய்களும் அதிகரிக்கும் எனவும், எனவே முற்கூட்டியே உரிய முறையில் திண்மக்கழிவுகளை சேரவிடாது. அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் பிரஸ்தாபிக்கப்பட்டது. (த-252)

# வசதிகுறைந்த மாணவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடி

(சுதுமலை)

யாழ்.மாவட்ட பாடசாலைகளில் உள்ள மாணவா்களில் மருத்துவ பரிசோதனையின் போது இனம் காணப்பட்ட கண் குறைபாடு உடைய மாணவா் விபரத்தை விரைவில் தமக்கு அனுப்பிவைக்குமாறு கோரி யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளா் சகல சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கும கடிதம் அனுப்பியுள்ளாா்.

பாடசாலைகளில் மருத்துவப்பரிசோதனைகளை வைத்திய அதிகாரிகளும் பொதுச் சுகாதாரப் பரிசோதகா்களும் இணைந்து மேற் கொண்டு வரும்போது பல மாணவா்களிற்கு கண்ணில் பாா்வைக்குறைபாடு இருப்பது இனம் காணப்பட்டுவருகிறது.

எனவே, அவா்களது குறைபாட்டை நிவா்த்தி செய்வதற்கு கண்ணாடிகள் அவசியம். அவற்றை வசதிகுறைந்த மாணவா்களிற்கு பெற்றுக்கொடுக்கும் நோக்கில் இவ் விபரங்கள் தேவைப்படுவதாகவும், விரைவில் பொதுச் சுகாதாரப் பரிசோதனை பிரிவு ரீதியாக அவற்றைத் தயாரித்து அனுப்பிவைககுமாறும் பணிப்பாளா் மேலும் தெரிவித்துள்ளாா். (த-252)

# பௌர்ணமி தினப் பாராயணம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் புரட்டாதி முதலாம் திகதியும் பௌா்ணமித் தினமும் ஒன்றாக அமைந்த இன்றைய தினத்தில் காலை 8.00மணிக்கு புங்குடுதீவு பெருங்காட்டு சா்வோதய நிலைய ஈஸ்வர சிவன் மடாலயத்தில் இருந்து பூசை வழிபாட்டுடன் வீதியுலாவாகப் புறப்பட்டு வேலணை மேற்கு ஶ்ரீமாகாகணபதி தேவஸ்தானத்தில் (முடிப் பிள்ளையாா்) கோயில் எழுந்தருளி ஆறு திருமுறை (6திருமுறை) முற்றோதல் ஆரம்பமாகி தொடா்ந்து நடைபெறும்.

பௌா்ணமத்தின அகத்தியா் தேவாரத் திரட்டு முற்றோதல் பன்னிரு திமுறைப் பாராயணம் பூசை வழிபாடும் இன்று நடைபெறும். (த)

ஆற்றாரும் ஆற்றி அடுபகிடன் அறிந்து
போற்றார் கண் போற்றிச்செயின் - குறள்

வலம்புரி

## ஜனாதிபதி சந்திரிகாவின் ஆச்சரியமான கோரிக்கை

இலங்கை இனப்பிரச்சினை இந்தளவு தூரம் ஊதிப்பருப்பதற்கான காரணங்களில் அரசின் பொய்ப்பிரசாரமே உயர்வானதென அடித்துக் கூறமுடியும்.

1983 களுக்கு பின்னான ஐக்கியதேசியக்கட்சியின் ஆட்சிக்காலத்தில் தமிழர் தாயகத்தில் செல் மற்றும் விமானக் குண்டுவீச்சுக்கள் எனப் பல வழிகளிலும் படைத்தரப்பு தாக்குதலை மேற்கொண்டது.

தாக்குதல்கள் அனைத்தும் பொதுமக்களின் குடியிருப்புக்கள் மீது மேற்கொள்ளப்பட்டதால் அப்பாவி மக்கள் அநியாயமாக பலியானார்கள்.

பொது மக்களின் குடியிருப்புக்கள் மீது தாக்குதலை நடத்திவிட்டு போராளிகளின் முகாம்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக அரசும், படைத்தரப்பும் பிரச்சாரம் செய்தன.

அது மட்டுமல்லாமல், படையினரின் தாக்குதல்களில் இறந்த தமிழர்களின் சடலங்களை பொறுப்பேற்பதற்கு கூட 'பயங்கரவாதி'என ஒத்துக்கொள்ளவேண்டிய தேவை இருந்தது.

இவ்வாறு தமிழ் மக்களை நசுக்கி வந்த அரசு இறந்துபோன அப்பாவித் தமிழர்களுக்கு பயங்கரவாத பட்டத்தை சூட்டி உலகிடம் இருந்து தப்பிக்கொண்டது.

அரசு கூறுவதுதான் உண்மையென்ற மாயையில் இருந்த உலகநாடுகள் உண்மை நிலையை உணர்ந்துகொள்ளத் தவறின.

இதன் காரணமாக தமிழ் மக்களுக்கு எதிரான போரை இலங்கை அரசுகள் எவ்வித அச்சமும் இன்றி முன்னெடுத்தன.

தமிழர்களுக்கு எதிரான அரசின் யுத்தத்திற்கு இஸ்ரேல், அமெரிக்கா, பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகளின் ஆயுத உதவியும் மனித உழைப்பும் தாராளமாக இருந்தன.

தமிழர்களின் தாயகத்தில் நடத்தப்பட்ட விமானக்குண்டு வீச்சுக்களில் அநேகமானவற்றை இஸ்ரேலிய கூலிப்படைகளே செய்து முடித்தன என்ற உண்மை இலகுவில் மறப்பதற்குரியதல்ல.

இவ்விதம் இலங்கை அரசின் அட்டூழியத்திற்கு கூலிப்படைகளை வழங்கி சீவியம் நடத்தும் துரோகத்தனமான சில நாடுகளும் உதவின. இதனால் தமிழினம் தாங்கொணாத துன்பத்தை அனுபவித்துக்கொண்டது.

இவற்றின் மத்தியில் இலங்கை அரசின் கயமத்தனத்தை எதிர்ப்பதற்காக தமிழீழ விடுதலைப் புலிப்போராளிகள் ஆயுதம் ஏந்தினர். தமது மண்ணின்-மக்களின் விடுதலையை உறுதிசெய்து கொண்ட அவர்களின் இலட்சியவேட்கை ஆத்ம பலமாக வியாபகம் பெற்றது.

அந்தப் பலத்தை அரச படைகள் மட்டுமல்ல இஸ்ரேலின் கூலிப்படைகளும் எதிர்க்க முடியாமல் திணறின. இத்தகையதோர் சமபல உருவாக்கத்தில் விடுதலைப்புலிகளுடன் பேச்சுநடத்த இலங்கை அரசுகள் முற்பட்டன.

ஆயினும், இலங்கை அரசை நம்புவதற்கில்லை. ஏற்றுக்கொள்ளக்கூடிய சர்வதேச நாடொன்றின் அநுசரணை தேவையென விடுதலைப்புலிகள் வலியுறுத்தினர்.

இது எமது பிரச்சினை நாமே அதனைத் தீர்த்துக்கொள்ளலாமென சர்வதேசத்தின் அநுசரணையை இலங்கை அரசு தட்டிக்கழிக்க முற்பட்டது.

இவ்வாறு சர்வதேசத்தை தட்டிக்கழித்துவிட முற்பட்ட நிலையில் இப்போது விடுதலைப்புலிகளை பேச்சுக்கு அழைக்க சர்வதேசத்தின் உதவி தேவையென ஜனாதிபதி சந்திரிகா கூறியிருப்பது நம்பமுடியாத உண்மைதான்.

# பதினெட்டு மாத கால ஆட்சியில் கூட்டமைப்பு சாதித்தது என்ன?

## அடுத்த ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் பாரிய பொறுப்பு மக்களிடமே என்கிறார் பீரிஸ்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளா மஹிந்த ராஜபக்ஷவிற்கும் ஜே.வி.பியினருக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை புதிய தொனறல்ல என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜ.எல். யரிஸ் தெரிவிததுள்ளார்.

ஐககிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தை ஏற்படுத்துவதற்காக செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையே இதுவாகும்.

ஜே.வி.பியும் ஜாதிக ஹெல உறுமயவும் இணைந்து மீண்டும் இந்த நாட்டை யுததமொன்றை நோக்கி இட்டுச்செல்லவே முயற்சிக்கினறன.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் இரண்டு பிரதான தலைவர்கள் போட்டியிடுகின்றனர். இவர்களில் நாட்டினை முன்னேற்றக் கூடிய சிறந்த தலைவர் யார் என்பதே பிரச்சினை.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினால் முன்வைக்கப்பட்ட தேர்தல் பிரகடனக கொள்கைகள் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கொள்கைகளே.

இந்த நிலையில் நாட்டை யுத்தத்தை நோக்கி இழுத்துச் செல்லவதா? அல்லவா? என்பதை ஜனாதிபதித் தேர்தலில் மக்களே தீர்மானிக்க வேண்டும்.

பதினெட்டு மாதங்களாக ஆட்சியிலுள்ள கூட்டமைப்பு அரசாங்கத்தினால் மக்களுக்கு எந்தவித நன்மையும் ஏற்படவில்லை. இவ்வாறான நாட்டு மக்களுக்கு நன்மை செய்யாத பிரதமரால் நாட்டினை மீண்டும் எவ்வாறு அபிவிருத்தி செய்யமுடியும்? எனவும் பேராசிரியர் ஜீஎல்பீரிஸ் மேலும் கேள்வி எழுப்பியுள்ளார். (ந-4)

## ஜே.வி.பி-மஹிந்த-ஹெல உறுமய ஒப்பந்தங்கள்


## ஸ்ரீ.சு.கவின் கொள்கைகளுக்கு முரண்படாவிடின் மஹிந்தவுக்கு பூரண ஆதரவளிக்கத் தயார் -அனுரா

(கொழும்பு)

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஏனைய கட்சிகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கொள்கை மறறும் கோட்பாடுகளுடன் முரண்படவிட்டால் தனது முழுமையான ஆதரவினை பிரதமருக்கு வழங்குவதோடு அவருக்காக ஜனாதிபதித் தேர்தலில் முழுமூச்சுடன் பிரசாரம் செய்யவும் தயாராகவிருப்பதாகத் தெரிவித்துள்ளார் வெளிவிவகார அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க.

தற்போது நியூயோர்க் நகரில் நடைபெறும் ஐ.நா.சபை யின 60ஆவது வருடாந்த மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்றுள்ள அநுரா பண்டாரநாயக்க தொலைபேசி மூலம் அளித்த பிரத்தியேக செவ்வியிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் இதுதொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,



ஜனாதிபதித் தேர்தலில் பிரதமருக்கு நான் ஆதரவு அளிக்கப்போவதில்லை என ஊடகங்களில் வெளிவந்த செய்திகள் குறித்து தான் கவனத்தில் எடுத்துள்ளேன்.

இதுகுறித்து ஜனாதிபதியுடன் கலந்துரையாடியுள்ளேன் பிரதமர் மேற்கொண்ட உடன்படிக்கைகளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மிகவும் தீவிரமாக ஆராய்ந்து இவ் உடன்படிககைக்கு பிரதமர் கட்சியினதும் அங்கத்தவர்களினதும் இணக்கத்தினைப பெற்றால் எனது முழுமையான ஆதரவு பிரதமருக்கு உண்டு என்றார். (ந-4)

## விளைவுகளை கவனத்தில் கொண்டே ஒப்பந்தங்களில் கைச்சாத்திட வேண்டும்

### மல்வத்த பீடாதிபதி வலியுறுத்து

(கொழும்பு)

எவரும் எவ்வாறான ஒப்பந்தங்களையும் ஏற்படுத்திக் கொண்டு கைச்சாத்திடுவதும் பரிமாறிக்கொள்வதும் தவறாகாது ஆனால், சில சந்தர்ப்பங்களில் அவ்வாறான உடன்படிக்கைகளையும் நிறைவேற்ற முடியாத நிலை ஏற்படும் பட்சத்தில் அதன் நிலை என்னவாகும் என்பதை உணரவும் வேண்டும் என கண்டி மல்வத்தை பீடத்தின் மகாநாயக்க தேரர் திப்பட்டுவாவே சிறிசித்த சுமங்கள தேரர் தெரிவித்துள்ளார்.

ஜாதிக ஹெல உறுமயவிற்கும் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் இணக்கப்பாடு ஒப்பந்தம் பரிமாறப்பட்ட பின்னா ஹெல உறுமயவின் தலைவரான எல்லாவல மேதானந்த தேரர் தலைமையிலான பிரமுகர்கள் கண்டி மல்வத்த பீடாதிபதி திப்பட்டுவாவே சிறிசித்தார்த்த சுமங்கள தேரரைச் சந்தித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எமது நாடு சகல இனங்களுக்கும் பொதுவான நாடு என்பதை உணரவேண்டும். உடன்படிக்கை,இணக்கப்பாடுகளை மேற்கொள்ளும் போது ஏனையோருடனும் கலந்துரையாடி அவர்களுக்கான திட்டங்களையும் வகுத்து அவர்களையும் இணைத்துச் செல்வதே சாலச்சிறந்தது.

அதேபோன்று நாட்டிற்கு அனுகூலமாக ஏற்புடைய வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படல் வேண்டும். இவ்வாறான சந்தர்ப்பங்களின்போது அடிப்படை வாதங்களை கவனத்தில கொள்ளலாகாது. சிங்களவர்,தமிழர்,இஸ்லாமியர் உட்பட அனைத்து இனங்களையும் சார்ந்த மக்கள் இந்த நாட்டில் வாழ்ந்து வருகின்றனர். இவ்வனைவரும் அமைதியாக வாழவேண்டும் என்பதே அனைவரினதும் அபிலாஷையாகும்.

தேர்தல் ஒன்றின்போது தேர்தலுக்காக முன்வைக்கப்படுகின்ற உடன்பாடுகள்,ஒப்பந்தங்கள், நிபந்தனைகள் தேர்தலின பின்னர் நிறைவேற்றப்படும் என கட்டாயப்படுத்தப்படும் பட்சத்தில் விளைவு எவ்வாறாக அமையும் என்பதையும் கவனத்தில் கொள்வது அவசியமாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (ந-4)

## வவுனியாவில் நால்வர் கைது

(கொழும்பு)

வவுனியா நகரில் படையினர் கடந்த திங்கட்கிழமை தீவிர தேடுதல் நடவடிக்கை மேற்கொண்டனர்.

இந்த நடவடிக்கையின் போது ஈழநாதம் பத்திரிகை விற்பனையாளர் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் இரண்டு அடையாள அட்டை வைத்திருந்தவர் என்றும் மற்றைய இருவரும் தமது கடைக்கு பின்னால் இராணுவ சீருடையை ஒத்த துணிவகைகளைப் பதுக்கி வைத்திருந்தார்கள் என்றும் வவுனியா பொறுப்பதிகாரி ஏ.எம்.சி. அபயசிங்க பண்டா தெரிவித்தார்.

ஈழநாதம் பத்திரிகை விற்பனையாளர் பொலிஸாரல் விசாரிக்கப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டதன் பின்னர் விடுதலை செயயப்பட்டார்.

ஏனைய மூன்று பேரும் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருவதாக அபயசிங்க பண்டா மேலும் தெரிவித்தார். (இ-4)

### இன்னும் 100வருடங்களில்

## பூமியின் வெப்ப நிலை அதிகரிக்கும்; தீவுகள் கடலில் மூழ்கும் அபாயம்!

(கொழும்பு)

எதிர்வரும் 100 வருடங்களில் பூமியின் வெப்பம் அதிகரிக்கக் கூடும் என்று ஆய்வுகள் மூலம் தெரியவருகின்றது.

இதன் அடிப்படையில் தற்போதைய 1.4 செனரிகிரேட் வெப்பநிலை 5.8 ஆக அதிகரிக்கக் கூடும் என்று வளிமண்டல வியல திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதிகளவான மழைவீழ்ச்சி கடல் மட்டம் உயர்தல் போன்ற காலநிலை மாற்றங்கள் இதன் காரணமாக ஏற்படக்கூடும் என்று திணைக்களத்தின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

வழமையை விட கடல்மட்டம் உயர்ந்து நிலப்பகுதிக்குள் கடல் நீர் உட்பிரவேசிக்கும் நிலையேற்படும் என்றும் இதன் காரணமாக உலகிலுள்ள பல தீவுகள் கடல் நீரில் மூழ்கும் அபாயம் ஏற்படும் என்றும் அவர் எதிர்வு கூறியுள்ளார். (த-9)

### தினசரி தியானம்



## விவேகச் சிந்தனைகள்

இந்த உலகம்தான் வாழ்வின் இலட்சியமா? வேறு ஒன்றும இல்லையா? நாம் இப்போது இருப்பது போல் தான் இருக்க வேண்டுமா? இதற்கு மேலாக இருக்க வேண்டாமா? எந்தத்தடையும் இல்லாமல் சுலபமாக ஓடுகின்ற ஒரு எந்திரமாக இருக்க வேண்டியவனா மனிதன்?

சுவாமி விவேகானந்தர்

# நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

அரியாலை சனசமூக நிலைய 56ஆவது ஆண்டு நிறைவு விழாவை ஒட்டி இன்று காலை 7மணிக்கு ஆண்களுக்கான மரதன் ஓட்டமும் காலை 8.00மணிக்கு மூன்று சில்லுசைக்கிள் ஓட்டமும் காலை 10.00 மணிக்கு கிறிக்கட் இறுதி ஆட்டமும் இரவு 8.00மணிக்கு கரப்பந்தாட்ட இறுதி ஆட்டமும் நடாத்தப்படும்

நாளை பிற்பகல் 2.30 மணிக்கு இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நிலைய மைதானத்தில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக சுங்க உத்தியோகத்தர் கு.இரவீந்திரக் குமாரும் சிறப்பு விருந்தினராக ஜே/93 கிராம சேவகர் இ.சண்முகநாதனும் கௌரவ விருந்தினராக யாழ். மாவட்ட விளை யாட்டுப் பொறுப்பாளரும் கலந்து கொள்ளவுள் ளனர். (ச-7)

# பெண்களின் பாலியல் உறவுக்கான வயதை 16 இல் இருந்து 13 ஆகக் குறைக்க முடிவு

(கொழும்பு)

இலங்கையில் பெண்களின் பாலியல் உறவுக்கான சட்டபூர்வ வயதினை 16 விருந்து 13ஆகக் குறைப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது. இச்சட்டதிருத்தத்தின்படி 21 வயதிற்குட்பட்ட இளைஞன் ஒருவர் 13 வயதுச் சிறுமியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினாரா அல்லது அச்சிறுமியின் விருப்பத்துடனேயே உறவு கொண்டாரா என்பதைத்தீர் மானிக்கும் அதிகாரம் சட்டமா அதிபருக்கு வழங்கப்படும் என்று அமைச்சர் நீதியமைச்சர் ஜோன்செனிவிரத்ன தெரிவித்தார். தமது காதலியுடன் பாலியல் உறவு கொண்டமைக்காக விளக்க மறியலில் நடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர்களின் எண்ணிக்கை இலங்கையில் அதிகரித்து வருவதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். இதேவேளை அமைச்சரவையின் இம் முடிவுக்கு பெண்கள் உரிமை அமைப்புக்கள் கடும் கண்டனங்களை வெளியிட்டுள்ளன. (ச)

# வலயக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

தீவகல்விவலயமும் முன் பள்ளி மேம்பாட்டு நிலையமும் இணைந்து நடாத்தும் வலயக்கண் காட்சியும் கலை நிகழ்வும் இன்று காலை 9 மணிக்கு வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் நடை பெறவுள்ளது.

முறைசாராக்கல்வி முன்பள்ளிக் கல்வி உதவிப்பணிப்பாளர் க.கணபதி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் கல்வி முகாமைத்துவ பிரதிக்கல்விப் பணிப் பாளர் ஐ.புவனேந்திரன் பிரதம விருந்தினராக கலந்துகொள்கிறார் (ச)

# காயமடைந்தவர் மரணமானார்

(யாழ்ப்பாணம்)

கொடிகாமத்தில் இம்பெற்ற இரு குழுக்களுக்கிடையிலான கோஷ்டி மோதலின் போது துப்பாக்கிச் சூட்டுக் காயத்திற்கு இலக்காகி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தவர் அங்கு மரணமானார்.

கோஷ்டி மோதலின் போது கடந்த 7ந் திகதி படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த தவசிக்குளம் கொடிகாமத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி ரங்கன் (வயது 31) என்பவரே மரணமானவராவர். அவரது சடலம் நேற்று உறவினர் ளிடம் கையளிக்கப்பட்டது. (ச-19)

# மேர்வின் சில்வா மகன் பிணையில் விடுதலை

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள் பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா மகன் மாலக்க சில்வா பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

போதை பொருள் தடுப்புப் பொலிஸார் இருவரைத் தாக்கிய வழக்கில் மேர்வின் சில்வா மகன் மாலக்க சில்வா, மேர்வின் சில்வாவின் வாகன ஓட்டுநர் சம்பத் ராஜ பக்ஷ ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

இவ் வழக்கில் மாலக்க சில்வா பிணை கோரி தாக்கல் செய்த மனு மீது கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி ரோகினி நாணயக்கார நேற்று முன்தினம் வியாழக்கிழமை விசாரணை நடத்தினர்.

விசாரணை முடிவில் 50ஆயிரம் ரூபாவுக்கான பிணையத் தொகை செலுத்தி குற்றம் சாட்டப்பட்ட இருவரது கைரேகைகள் பதிவு செய்து கொள்ளப்பட்ட பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டனர். (ச-4)

# பிரதேச சபைத்தலைவரின் இல்லம் மீது தாக்குதல்

பொலநறுவை திம்புலாகல பிரதேச சபைத்தலைவர் சரத்குமார குலதுங்கவின் இல்லம் மீது நேற்று முன்தினம் இரவு இனந் தெரியாத நபர்களினால் கைக்குண்டுத்தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

செவனப்பிட்டியவில் உள்ள அவரது இல்லம் மீது நேற்று முன்தினமிரவு 10 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த நபர்களினால் இக்கைக்குண்டுத்தாக்குதல் நடாத்தப் பட்டுள்ளது.

வீட்டுக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனமும் வீட்டின் முன்பகுதியும் சேதமடைந்துள்ளது. இதனிடையே திருகோணமலை மாவட் டம் அநுராத புரச் சந்தியில் உள்ள பொலிஸ் மற்றும் விமானப்படை கூட்டு வீதி தடை மீதும் மட்டக்களப்பு மாவட் டம் களுவாஞ்சிக்குடி காவலரண் மீதும் நேற்று முன்தினம் இரவு கைக்குண்டுத்தாக்குதல்கள் நடாத்தப்பட்டுள்ளன. (ச-4;8)

# வன்முறைகளை கட்டுப்படுத்த கிழக்கில் விசேட கண்காணிப்பு குழு

(மட்டக்களப்பு)

கிழக்கிலங்கையில் வன்முறையைக் கட்டுப் படுத்த வலுவான கண்காணிப்புக் குழு உருவாக்கப்பட வேண்டும் என்று மனித உரிமைகள் ஆணையம் வலியுறுத்தியுள்ளது.

கிழக்குப் பிரதேச மனித உரிமைகள் குறித்து தனது அறிக்கையில் மனித உரிமைகள் ஆணையம் இதைத்தெரிவித்துள்ளது.

அப்பிரதேசத்தில் அதிகரித்து வரும் மனித உரிமைகள் மீது உரிய விசாரணை நடத்த வேண்டும் அதற்கு வலுவான சுயாதீனமான ஆயுதப் பாதுகாப்புடைய ஒரு கண்காணிப்புக் குழு உருவாக்கப்பட வேண்டும்.

கடந்த ஒகஸ்ட் மாதம் முதல் கிழக்குப் பிரதேசத்தில் மனித உரிமைகள் அதிகரித் துள்ளதாகவும் அவ்வறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது. (ச-4)

# கொலை வழக்கு ஆதாரங்கள் சிக்கின

மாமனிதர் ஊடகவியலாளர் சிவராமை கொலை செய்த கொலையாளிகள் தொடர்பான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக கடுவல நீதிமன்றில் கொழும்பு குற்றப் பிரிவு திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்று நீதிமன்றிற்கு வந்த குற்றப்பிரிவு அதிகாரி சிவராம் கொலையாளிகளிடம் கொலைக்கான துப்பாக்கி உள்ளிட்ட ஆதாரங்கள் கிடைத்துள்ளன என்றும் காவலில் வைக்கப் பட்டுள்ளோரிடம் தொடர்ந்து நடத்திய நீண்ட விசாரணையில் இந்தத் தகவல்களைப் பெற முடிந்ததாகவும் திணைக்கள அதிகாரி தெரிவித்தார். (4)

## முதலில்...

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜ பக்ஷவுக்கும் ஜாதிக ஹெல உறுமயவிற்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையில் விடுதலைப் புலிகள் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டுமென கூறப்பட்டது.

அக் கூற்றுத் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே தயாமாஸ்டர் இதனைத் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் ஆயுதங்களை ஒப்படைக்க முன்பாக தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கான இறுதித் தீர்வு முன் வைக்கப்பட்டாலேயே அதற்கான ஒப்பந்தமும் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்த வேண்டும்.

ஆயுதக்களைவும் இறுதித் தீர்வும் என்பதெல்லாம் வெறும் கனவுதான் ஒரு போதும் நிஜமாக நடக்கப்போவதில்லை. நாங்கள் ஆயுதங்களை ஒப்படைப்பதற்கு முன்னதாக நீங்கள் ஒரு இறுதித் தீர்வுக்கு வாருங்கள் என அரசுக்கு அவர் அழைப்பு விடுத்துள்ளார். (ச-4)

## நிரந்தர...

வழி சமைத்துள்ளது.

எனினும் தமிழீழ விடுதலைப்புலிகளை பயங்கரவாத நடவடிக்கையில் இருந்து முற்று முழுதாக வெளிக்கொணருவது கடமையாக இருப்பதாக அவர் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு இனப்பிரச்சினைக்கு பேச்சு வார்த்தை மூலமான சமஷ்டி தீர்வொன்றினைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் எமது அரசாங்கமே நடவடிக்கை எடுத்தது.

பல்வேறு இடர் பாடுகளுக்கு மத்தியிலும் சமாதானப் பேச்சுவார்த்தை முன்னெடுத்துச் செல்வதற்கு நோர்வே அரசாங்கம் எமது அழைப்பின் பேரில் ஏற்பாட்டாளர்கள் என்ற வகையில் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை ஆற்றியுள்ளனர்; ஆற்றிவருகின்றனர்.

எவ்வாறு இருந்தாலும் அரசாங்கம் யுத்தத்தினை விரும்பவில்லை சமாதான வழி முறையின் ஊடாக நிரந்தரத்தீர்வினை அடைவதற்கு தொடர்ந்து பாடுபடுமென ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (ச-4)

# அமரபுர மகா நாயக்கர் மட்டக்களப்பு விஜயம்

(மட்டக்களப்பு)

அமரபுர பௌத்த பீடத்தின் மகாநாயக்கர் திபுல்தெனி சிறி ஞானஸ்ஸர தேரர் தரை வழியாக நேற்று மாலை மட்டக்களப்பு சென்றடைந்தார்.

இனங்களிடையேயும் மதங்களிடையேயும் ஐக்கியத்தை வலுப்படுத்தும் வகையில் இந்த பயணத்தை மேற்கொண்டுள்ள மகாநா யக்கர் நேற்று மாலை மட்டக்களப்பு மங்களராமய விகாரைக்குச் சென்றார்.

விகாரையில் சர்வ மதத் தலைவருடனான சந்திப்பில் இன ஐக்கியத்தின் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

மட்டக்களப்பு மற்றும் காத்தான்குடி பகுதியிலுள்ள சில ஆழிப்பேரலை நலன் புரி நிலையங்களுக்கும் நேரில் சென்று அவர் ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட இடங்களையும் பார்வையிட்டார்.

இருநாட்கள் மட்டக்களப்பில் தங்கியிருந்து பல்வேறு பகுதிகளுக்கும் நேரில் பயணம் செய்து மக்களை சந்திக்க உத்தேசித்துள்ள மகாநாயக்கர், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர்களையும் சந்திப்பார் எனத் தெரிகிறது.

யாழ். நாக விகாரை விகாராதிபதி ப்ரக்மான வத்தே சீவலி தேரோவும் ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தனாவும் அவருடன் மட்டக் களப்புச் சென்றுள்ளனர். (ச)


கண்ணீர் அஞ்சலி

N.R.K.வசந்தகுமார்

சுன்னாகம் கதிரமலை சிவன் தேவஸ்தான ஆஸ்தான வித்வான் நாதஸ்வரச் சக்கரவர்த்தி அமரர் N.R.கோவிந்தசாமியின் புதல்வரும் N.R.K இரத்தினகுமார ,வாகீஸ்வரன் ஆகியோரின் சகோதரனும் தவில் வித்வான் மு.கதிர்சனின் மைத்துனருமான N.R.Kவசந்தகுமார் அவர்கள் இறைபதம் எய்தியதையிட்டு அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தி அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர் ஏனைய கலைஞர்கள், இசை அபிமானிகள் அனைவருக்கும் ஆறுதல் கூறி இவர் ஆத்மா சொர்ணாம்பிகை பாகர் பொன்னம்பலவாண பெருமானின் திருவடியில் சேரப்பிரார்த்திக்கின்றோம் —சுபம்—

கதிரமலை சிவன்தேவஸ்தானம்
சுன்னாகம்

*சிவஸ்ரீ நா. சோமஸ்கந்தக்குருக்கள்*
*சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக்குருக்கள்*

(9799)



இன்று ஆரம்பம்

DAY CLASS

(கலைப்பிரிவு) காலை –8மணி

DMI
JAFFNA

(C-1648)



வான் சேவை

தினசரி யாழ்.–கொழும்பு குளிரூட்டப்பட்ட பஸ்சேவை. சுற்றுலா மற்றும் விசேட சேவைகளுக்கு வான், பஸ் என்பன ஒழுங்கு செய்து தரப்படும்

*தொடர்பு:-STR ரவல்ஸ் மல்ரி சென்ரர்*
*45 ஆடியபாதம் வீதி*
*திருநெல்வேலி*
*T.P:0777 570150,*
*4590223*



**Jaffna College Institute of Technology**
**Vaddukoddai**

**VACANCIES**

**Instructor/Lecturer**
**(Civil Engineering)**

**Qualification:** BSc.Eng.or E.C.E.or NDT or Passed JCIT Technician
Diploma or any equivalent Qualification.
**apply with full Bio Data to:**
**Director**
**Jaffna College Institute of Technology**
**Vaddukoddai.**
**On or before 21st Sept. 2005**

***Short listed candidates will be called for an interview***

**T.P : 0602213139,**
**021-2228275**

**E-mail -jcit@sltnet.lk**

(C1649)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை, பிறவுண்றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.09.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.